# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly மக்களுக்கான குரல் தமிழ் மாத இதழ்

● குரல் - 6 ● இதழ் - 6 ● ஆகஸ்டு, 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

● Volume - 6 ● Issue - 6 ● August, 2026 ● Tamil Monthly ● Price Rs. 25/-





## உதயநிதி கைதாகி விடுதலை






## முதல்வர் விஜய்யுடன் நடிகர் சிவகார்த்திகேயன் சந்திப்பு







# ஸ்ரீ மயிலை கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் ஆட்டோ நிறுத்தம்

## தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை®








சென்தன ஸ்ரீ மயிலை கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் ஆட்டோ நிறுத்தம் தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை சார்பில் 22.7.2026 அன்று தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபையின் தலைவர் திரு. G.B. பச்சையப்பன் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தலைவர் R. பகவான்தாஸ், துணைத் தலைவர் V.ஏழுமலை, செயலாளர் E. முனிதாஸ், பொருளாளர் E. பார்த்தசாரதி மற்றும் மன்ற உறுப்பினர்கள் J. ரங்கநாதன், V.N. கோவிந்தராஜ், A. கன்னிவேல், V.S. வேலு, N. நாராயணன், P. கந்தசாமி, M. ஆனந்தன் சிவலிங்கம், R. மணி, A. சங்கர், V. ராமகிருஷ்ணன், S. ஞானசேகர் ராமதாஸ், மன்ற காப்பாளர் C. வெங்கடேன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.







# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

● குரல் - 6 ● இதழ் - 6 ● ஆகஸ்டு, 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

● Volume-6 ● Issue-6 ● August, 2026 ● Monthly ● Price Rs.25/-

**நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்**

**G.B. பச்சையப்பன்**

**கௌரவ ஆசிரியர்**

டாக்டர் M.A.M. **ராமசாமி** அவர்களின்

முன்னாள் முதன்மைச் செயலாளர்

செட்டிநாடு S. **ராஜேந்திரன்**

**ஆலோசகர்கள்**

நிதில் & கோ S.R.P. **ராஜன்**

நடிகர் பயில்வான் **ரங்கநாதன்**

R. **கதிரவன்**

மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

**நிர்வாக ஆசிரியர்கள்**

R. பிரேம் சந்தர்

S.R. ரஞ்சித்

செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

**உதவி ஆசிரியர்கள்**

R. ரிச்சர்ட் ராஜ், S. சதீஷ்குமார்,

L. லிங்கேஷ்வரன்,

G.K. பாண்டியநேரு (தேனி), P. அஜய்

S. ஜெகன் மோகன்,

K. ஞானவேல்

**நிருபர்கள்**

V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)

P. ஆகாஷ் (சென்னை)

M.ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)

K. தினேஷ் (மத்திய சென்னை)

A. முனுசாமி (தென் சென்னை)

M. தினேஷ்

லட்சுமணன் (திண்டுக்கல்)

**புகைப்பட கலைஞர்**

எ. சங்கர்

பக்க வடிவமைப்பு:

**90941 19636**

**சட்ட ஆலோசகர்கள்**

E. **யோபு** M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)

D. **நவீன் சந்தர்** B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)

D.K. **பார்த்திபன்** B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)

பதிவு அலுவலகம் :

நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,

ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:

நெ.80/236 ஆர்.கே. மடம் சாலை,

மயிலாப்பூர், சென்னை - 600 004.

தொடர்பு எண்: 044 - 46088414 / 99622 35025



அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.


# ஆசிரியர் கடிதம்...

## மக்கள்தொகை கணக்கெடுப்பு களப்பணி தொடக்கம்!

மக்கள்தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக வீடுகள் பட்டியல், வீட்டின் வசதிகள் கணக்கெடுப்பின் களப்பணிகள் தொடங்குகின்றன.

இந்தியாவில் மக்கள்தொகை கணக்கெடுப்பு 16 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது நடைபெறுகிறது. வீடுகள் பட்டியல், வீட்டின் வசதிகள் கணக்கெடுப்பு மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு என்று 2 கட்டங்களாக இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.



மக்கள் நேரடியாக தங்கள் சுய விவரங்களை பதிவேற்றம் செய்யும் வகையில் சுய கணக் கெடுப்பு பணி கடந்த 17-ம் தேதி தொடங்கி நேற்று (ஜூலை 31) முடிவடைந்தது. இந்த வசதியைப் பயன்படுத்தி தமிழகத்தில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இணையதளம் வழியாக விவரங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இந்நிலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக வீடுகள் பட்டியல், வீட்டின் வசதிகள் கணக்கெடுப்பின் களப்பணிகள் இன்று (ஆக.1) தொடங்கி ஆக.30-ம் தேதி வரை தமிழகம் முழுவதும் நடைபெற உள்ளது. 1.15 லட்சம் கணக்கெடுப்பாளர்கள் கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் அனைத்து வீடுகளுக்கும் நேரில் வந்து கணக்கெடுப்பு நடத்துவார்கள். 33 கேள்விகள் கொண்ட கேள்விவித்தாளை கொண்டு, இப்பணி மேற்கொள்ளப்படும். வீடுகளின் நிலை, குடிநீர், கழிவறை, மின்சாரம், இணைய வசதி, சமையல் எரிபொருள், கழிவறை வசதி, வாகனங்கள் போன்ற முக்கிய தரவுகள் சேகரிக்கப்படும்.

இந்தியாவில் முதல்முறையாக இப்பணிக்கு நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. 1948-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு சட்டத்தின்படி, சேகரிக்கப்படும் அனைத்து தகவல்களும் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்பட்டு, முற்றிலும் ரகசியமாக வைக்கப்படும். புள்ளி விவரப் பாதுகாப்பு, பொதுக் கொள்கை உருவாக்கம் ஆகியவற்றுக்காக மட்டுமே இந்த தகவல்கள் பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



G.B.பச்சையப்பன்

தலைமை ஆசிரியர்

33 கேள்விகள் கொண்ட கேள்விவித்தாளை கொண்டு, மக்கள் கணக்கெடுப்புப்பணி மேற்கொள்ளப்படும். வீடுகளின் நிலை, குடிநீர், கழிவறை, மின்சாரம், இணைய வசதி, சமையல் எரிபொருள், கழிவறை வசதி, வாகனங்கள் போன்ற முக்கிய தரவுகள் சேகரிக்கப்படும் என்ற தகவல் சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். ●




மத்திய கிழக்கு நாடுகளின் கோரிக்கையை ஏற்று ஈரான் மீதான தாக்குதல் நிறுத்தப்படுகிறது என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா - ஈரான் இடையே கடந்த பிப்.28-ம் தேதி போர் தொடங்கியது. கடந்த ஏப்.8-ம் தேதி இருதரப்பு இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. ஜூன் 17-ம் தேதி இரு நாடுகள் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால், ஹார்முஸ் ஜலசந்தியில் சென்ற சில சரக்கு கப்பல்கள் மீது ஈரான் ராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதன்காரணமாக கடந்த ஜூலை 13-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதலை தொடங்கியது. ஈரானின் ராணுவ தளங்கள், ஆயுத உற்பத்தி ஆலைகள், ஆயுதக் கிடங்குகள், உள்கட்டமைப்புகளை குறிவைத்து அமெரிக்க ராணுவம் அதிதீவிர தாக்குதல்களை நடத்தியது. இதற்கு பதிலடியாக ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, குவைத், ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் ராணுவம் ஏவுகணை, ட்ரோன்கள் மூலம் தீவிர தாக்குதல்களை நடத்தியது.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவு:

இரண்டாம் உலகப்போருக்கு பிறகு மிகப்பெரிய அச்சுறுத்தலாக ஈரான் உருவெடுத்திருக்கிறது. அந்த நாட்டு ராணுவம், தீவிரவாத அமைப்பு போன்று செயல்படுகிறது. ஈரானுக்கு எதிரான போருக்கு அமெரிக்கா முழுவீச்சில் தயாராக உள்ளது.

எனினும், போரை நிறுத்துமாறு ஈரானும், மத்திய கிழக்கு நாடுகளும் கோரிக்கை விடுத்துள்ளன. இதன் மூலம் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த முடியும் என்று அந்த நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இதை ஏற்று ஈரான் மீதான தாக்குதல் நிறுத்தப்படுகிறது. ஹார்முஸ் ஜலசந்தி முழுமையாக திறக்கப்பட வேண்டும். ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது.

இதை மையப்படுத்தி அமைதி ஒப்பந்தம் வரையறுக்கப்பட வேண்டும். உலக நன்மை கருதி போர் நிறுத்த முடிவை எடுத்துள்ளோம். அமெரிக்காவோடு இணைந்து போர் நிறுத்தத்தை அமல்படுத்த இஸ்ரேலும் உறுதி அளித்திருக்கிறது. இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## சவுதி - ஈரான் பேச்சுவார்த்தை:

இதற்கிடையே, சவுதி அரேபியா வெளியுறவு அமைச்சர் பைசல் பின் பர்ஹான் நேற்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது போர் நிறுத்தத்தை அமல் செய்வது தொடர்பாக இரு நாடுகளின் அமைச்சர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர். அப்போது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், பதில் தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் அமைச்சர் அப்

பாஸ் எச்சரிக்கை விடுத்தார்.

இதனிடையே ஈரான் பாதுகாப்புத் துறை அமைச்சர் சையத் மஜித் இப்னு ரெஸா நேற்று கூறும்போது, "எதிரிகளின் (அமெரிக்கா) சமீபத்திய அறிக்கை உளவியல் ரீதியானது என்று கருதுகிறோம். நாங்கள் அஞ்சவில்லை. எதற்கும் தயார் நிலையில் இருக்கிறோம். எங்களது ராணுவ பலத்தை மேலும் அதிகரிப்போம்" என்று தெரிவித்துள்ளார்.

கத்தார் பிரதமர் ஷேக் முகமது கூறியபோது, "மேற்கு ஆசிய போரை நிறுத்துவது தொடர்பாக சவுதி அரேபியா, கத்தார், ஜோர்டான், குவைத் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடன் கத்தார் அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியில் தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது" என்றார்.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் அந்த நாட்டு பிரதமருமான சல்மான் நேற்று அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் தொலைபேசியில் விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார். இதைத் தொடர்ந்தே போர் நிறுத்த அறிவிப்பை அதிபர் ட்ரம்ப் வெளியிட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது குறித்து மேற்கத்திய ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளில் கூறியிருப்பதாவது: அமெரிக்காவின் தாக்குதல் நீடித்தால் வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் வயல்கள், கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தகர்ப்போம் என்று ஈரான் பகிரங்கமாக மிரட்டல் விடுத்தது. இதனால் ஒட்டுமொத்த வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் சீர்குலையும் அபாயம் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து சவுதி அரேபியா, கத்தார், ஓமன் உள்ளிட்ட நாடுகள் அமெரிக்கா, ஈரான் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்த சமரச முயற்சிகளில் ஈடுபட்டன. குறிப்பாக சவுதி அரேபிய இளவரசர் சல்மான் அதிபர் ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இதன் காரணமாகவே அதிபர் ட்ரம்ப் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

இவ்வாறு அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# "இளைஞர்கள் வாழ்வை போதை சீரழிக்கும்" - விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி பிரதமர் எச்சரிக்கை



தற்காலிக கிளர்ச்சி தரும் போதை இளைஞர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் சீரழித்துவிடும் என பிரதமர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் இலக்கின் ஒருபகுதியாக, போதையில்லா பாரதத்துக்கான இளைஞர் உறுதிமொழி பிரச்சாரத்தை பிரதமர் மோடி நேற்று காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் கைகளில்தான் உள்ளது என்பதை நன்கு உணர்ந்துள்ள எதிரி நாடுகள், தங்களின் தீவிரவாதச் செயல்களின் ஒருபகுதியாக போதைப்பொருள் விநியோகத்தைப் பயன்படுத்தி அவர்களை அழிக்கும் வேலையில் ஈடுபடுகின்றன. போதைப்பொருள் உங்களுக்குச் சிறிது நேரக் கிளர்ச்சியைத் தரலாம்; ஆனால் அது உங்களின் ஒட்டுமொத்த தொழில், வாழ்க்கையை அடியோடு சீரழித்துவிடும். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைய, நமது இளைஞர்கள் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாகவும் தன்னம்பிக்கையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மீண்டு வெளியே வருபவர்கள் உண்மையான போராளிகள். அவர்களை அவமானப்படுத்தாமல் கவுரவித்து வாழ்க்கையில் இரண்டாவது வாய்ப்பை வழங்க வேண்டும். போதைப் பழக்கம் ஒரு தாயின் புன்னகையைப் பறிக்கிறது; தந்தையின் கனவுகளைத் தகர்க்கிறது; சகோதரியின் நம்பிக்கையைத் தளர்த்துகிறது. தன் கண் முன்னேயே குழந்தை சீரழிவதைப் பார்த்து ஒவ்வொரு குடும்பமும் இந்த வலியை அனுபவிக்கிறது.

போதைக்கு அடிமையான பிள்ளைகளை மறைக்காமல், அவர்களிடம் திறந்தமனதுடன் பேசி, மருத்துவ உதவிகளைப் பெற்றுத்தர குடும்பத்தினர் முன்வர வேண்டும். இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் அடுத்த 100 வாரங்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கலை, விளையாட்டு, தியானம், ஆன்மீகம், சேவை சார்ந்த பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்படும். வரவிருக்கும் 100 ஞாயிற்றுக்கிழமைகளும் போதையில்லா இந்தியாவை நோக்கி வைக்கப்படும் 100 வலுவான அடிகளாக அமையும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# ரூ.18,000 கோடி மதிப்பிலான வளர்ச்சி பணிகள் தொடக்கம்

ஆந்திராவுக்கு புதிய வளர்ச்சி இறக்கைகள்!
**போகாபுரம் விமான நிலையத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார் பிரதமர் மோடி!**

## ஆந்திராவில் பிரமாண்டமாக அமைந்துள்ள போகாபுரம் விமான நிலையம் திறப்பு!




மேம்பட்ட வசதிகள்... உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு... எதிர்கால வளர்ச்சிக்கான மைல்கல்!

ஆந்திராவில் உள்ள போகாபுரம் சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார். ரூ.18,000 கோடி செலவில் கட்டப்பட்ட பல வளர்ச்சி திட்டங்களையும் பிரதமர் காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

ஆந்திராவில் உள்ள விசாகப்பட்டினம் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முதல் பயணிகள் விமான சேவையை ரத்து செய்து, அதற்கு பதில், விஜயநகரம் மாவட்டம், போகாபுரத்தில் ரூ.4,727 கோடி செலவில் கட்டப்பட்ட அல்லூரி சீதாராம ராஜு சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

அப்போது அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

ஆந்திராவில் தற்போது ரூ.18 ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்ட பல்வேறு வளர்ச்சி பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது ஆந்திர மாநிலம், பொருளாதார ரீதியாகவும், பூகோள ரீதியாகும் மிகவும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதற்கு காரணம் இம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு தான். அவரின் தொலைநோக்குப் பார்வையை நான் பெரிதும் மதிக்கிறேன்.

போகாபுரம் சர்வதேச விமான நிலையம் இங்கு அமைந்ததால், இப்பகுதி விரைவில் பெருமளவு வளர்ச்சி பெறும் என்பதில் சந்தேகம் இல்லை. இதன் மூலம் இளைஞர்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். கடந்த கால ஆட்சியில் நம் நாட்டில் எங்கு விமான நிலையங்கள் திறக்கப்பட்டாலும் ஒரே ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்களின் பெயர்கள் தான் சூட்டப்படும். ஆனால், அந்த மரபு தற்போது இல்லை. அயோத்தியா விமான நிலையத்திற்கு வால்மீகி பெயர், பஞ்சாப் விமான நிலையத்துக்கு சந்த் ரவிதாஸ், போகாபுரம் சர்வ தேச விமான நிலையத்துக்கு சுதந்திர போராட்ட வீரர் அல்லூரி சீதாராம ராஜுவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

2014-ம் ஆண்டுக்கு முன் நம் நாட்டில் 74 விமான நிலையங்களே இருந்தன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த 12 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 166 ஆக அதிகரித்துள்ளது. விமான பயணம் செய்ய வேண்டும் என ஆசைப்படும் நடுத்தர, ஏழை குடும்பத்தினர் கனவை நனவாக்கி உள்ளோம். உடான் திட்டம் மூலம் நம் நாட்டில் விமான போக்குவரத்தில் பல மாற்றங்கள், வளர்ச்சிகளை கண்டு வருகிறோம்.

நாட்டில் கடல் பொருளாதாரத்தை வளர்ச்சி அடைய செய்து வருகிறோம். விசாகப்பட்டினம்



## போகாபுரம் விமான நிலையத்தின் சிறப்பம்சங்கள்

- சுமார் ₹4,200 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன விமான நிலையம்
- வருடத்திற்கு 60 லட்சம் பயணிகளை கையாளும் திறன்
- 3,400 மீட்டர் நீள ரன்வே – அனைத்து வகை விமானங்களும் இயக்க முடியும்
- உலகத்தரம் வாய்ந்த முனையம், தானியங்கி அமைப்புகளுடன் கூடிய வசதிகள்
- பார்கிங், லாஜிஸ்டிக்ஸ், வணிக மையங்கள் மற்றும் பல்வேறு நவீன வசதிகள்

## வளர்ச்சிக்கு புதிய வாய்ப்புகள்

- பொருளாதார வளர்ச்சி, முதலீடுகள் அதிகரிக்கும்
- சுற்றுலா, தொழில், வர்த்தகம் முக்கியமாக மேம்படும்
- ஆயிரக்கணக்கான நேரடி & மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்
- விசாகப்பட்டினம், விஜயவாடா, ராயல்சீமா மற்றும் வடக்கு ஆந்திரா மக்களுக்கு பெரும் பயன்

முதல் கிருஷ்ணபட்டினம் வரை பழைய துறைமுகங்களை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறோம். மூலபேட்டா, ராமாய பட்டினம் ஆகிய இடங்களில் புதிய துறைமுகங்களை ஏற்படுத்தினோம். துறைமுகங்கள் ஒரு புறம் மற்றொரு புறம் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சி என ஆந்திரா ஒரு புதிய வளர்ச்சி பாதையில் மிகவேகமாகசென்றுகொண்டிருக்கிறது.



### ரூ.1 லட்சம் கோடியில்..

ஆந்திராவில் ரூ.1லட்சம் கோடி செலவில் ரயில்வே பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. சாஃப்ட்வேர், ஐடி யில் தெலுங்கர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். சந்திரபாபு நாயுடு தலைமையில் ஆந்திராவில் 'உற்பத்தி மையம்' உருவாகி வருகிறது. உலகில் உள்ள பல பிரபல நிறுவனங்கள் ஆந்திராவை தேடி வருகின்றன. இங்கு தொழில் தொடங்க உள்ளன. ஆந்திராவில் க்ரோக் எக்கோ சிஸ்டம் தொடங்குகிறோம். செமி கண்டக்டர், டேட்டா சென்டர் போன்ற நிறுவனங்களில் பணிகள் இங்கு வேகமாக நடைபெற்று வருகிறது. இந்த டபுள் இன்ஜின் அரசால், ஆந்திரா இரட்டிப்பு வேகமாக செயல்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஆந்திர ஆளுநர் அப்துல் நசீர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், மத்திய அமைச்சர் ராம் மோகன் நாயுடு, மற்றும் ஆந்திர எம்.பி.க்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் பலர் பங்கேற்றனர்.






தவெக அரசின் முதல் பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன், சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்தார். அதில், ரூ.812 கோடியில் ‘அண்ணன் சீர்’ திட்டம் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் நடப்பு நிதியாண்டுக்கான (2026-27) திருத்தப்பட்ட பொது பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காகச் சட்டப்பேரவை நேற்று கூடியது. தவெக அரசின் முதல் பட்ஜெட்டை, நிதியமைச்சர் நெ.மரிய வில்சன் தாக்கல் செய்தார். பேரவையில் 10.01 மணிக்கு பட்ஜெட்டை வாசிக்கத் தொடங்கி 12.31 மணிக்கு பட்ஜெட் உரையை முடித்தார்.

பட்ஜெட்டை தாக்கல் செய்து அமைச்சர் மரிய வில்சன் பேசியதாவது: ஆட்சிக்கு வந்த 3 மாதங்களில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2036-ம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவதே அரசின் ‘வெற்றித் தமிழகம் - தொலைநோக்குத் திட்டங்கள்’ இலக்கு.

இந்த பட்ஜெட்டை மக்கள் நலன் காக்கும் கருவியாகப் பயன்படுத்தி தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைத்துள்ளோம். மேலும், மத்திய அரசின் நிதி பகிர்வு உட்பட மாநில அரசின் மொத்த வருவாய் வரவு 2026-27-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ரூ.3,50,027 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.






## புதிய திட்டங்கள்:

› ‘அண்ணன் சீர்’ திட்டத்தின் கீழ் பெண்களின் திருமணத்துக்கு 8 கிராம் (ஒரு சவரன்) தங்கக் காசு, ஒரு பட்டுப்புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

› கர்ப்பிணி பெண்களுக்கான ‘தாய் கேர்’ சேவை மற்றும் உதவி மையங்கள் அமைக்கப்படும். இதில் கர்ப்பிணிகளுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள், தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும்.

› ஆதரவற்ற பெண்கள், கைம் பெண்கள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு 100 சதவீதம் மானி






யத்தில் 5 ஆடுகள் வழங்கும், 'வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம்' செயல்படுத்தப்படும்.

› கல்லூரி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் 'வெற்றி மடிக் கணினி திட்டம்' ரூ.2,000 கோடியில் செயல்படுத்தப்படும்.

› 11-ம் வகுப்பு பயிலும் 5.32 லட்சம் மாணவர்களுக்கு ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் வசதியுடன் கூடிய நவீன பிராண்டட் மிதிவண்டிகள் வழங்கப்படும்.

› வெற்றி வீடு திட்டம் மூலம் ஊரகப் பகுதிகளில் ஏழைகளுக்கான வீடு கட்டும் திட்டத்தின் அலகுத் தொகை ரூ.3.1 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும். முதல் ஆண்டில் 70,000 வீடுகள் ரூ.3,500 கோடியில் கட்டப்படும்.

› மீன்பிடி தடை கால உதவித் தொகை ரூ.7 ஆயிரமாக உயர்த்தப்படும். இதன்மூலம் 1.93 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும்.

› வீடுகளில் சோலார் பேனல் அமைக்க ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்படும்.

› மாநிலம் முழுவதும் பொது இடங்களில் 20,000 மின் வாகன சார்ஜிங் மையங்கள் அமைக்கப்படும்.

› இந்தியாவின் முதல் பிரத்யேக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் 'டீப் டெக்' நகரமாக 'அறிவகம்' உருவாக்கப்படும். மேலும், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய பகுதிகள், 'விண்வெளித் தொழில் முதலீட்டு மண்டலமாக' அறிவிக்கப்படும்.

› சென்னை பிராட்வேயில் 160 நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ரூ.1,375 கோடியில் அமைக்கப்படும்.

› முதல் முறை ஹஜ் பயணிகளுக்கான மானியம் ரூ.35 ஆயிரமாக உயர்த்தப்படும்.

› காயிதே மில்லத் நினைவாக ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் புதிய விருது வழங்கப்படும்.

› காவிரி - வைகை - குண்டாறு நதி நீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும். பெண்ணையாறு - பாலாறு உள்ளிட்ட நதிநீர் இணைப்புத் திட்டங்களுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு.

› கூவம் மற்றும் அடையாறு ஆறுகளை மீட்டெடுத்து சென்னையின் அடையாளமாக மாற்ற உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும்.

› கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட 8 கடலோர மாவட்டங்களில் 2,500 எக்டேர் பரப்பளவில் புதிய சதுப்புநில அலையாத்திக் காடுகள் வளர்க்கப்படும்.

› மாநிலம் முழுவதும் ரூ.50 கோடியில் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் நிறுவப்படும். மேலும், ரூ.42 கோடியில் தமிழ்நாடு கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

› அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தினமும் ஒரு மணி நேரம் விளையாட்டுப் பாடவேளை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

› நீட் தேர்வை ரத்து செய்து, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையிலான மருத்துவச் சேர்க்கை நடத்த மத்திய அரசுக்கு வலியுறுத்தப்படுகிறது.

› போதைப் பழக்கத்தில் இருந்து மீள்வதற்கான பணிகளை முன்னெடுக்க மறுவாழ்வு நிதியாக ரூ.70 கோடி ஒதுக்கப்படும்.

› அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 2031-ம் ஆண்டு வரை புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். அடிப்படை காப்பீடு ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.7.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் மரிய வில்சன் அறிவித்தார்.

### தமிழக பட்ஜெட் 2026-27:

# வெற்றி மடிக்கணினி முதல் நவீன சைக்கிள் வரை

தவெக அரசின் முதல் பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன், சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்தார். அதில் கவனம் ஈர்த்த அம்சங்கள்:

ரூ.2 ஆயிரம் கோடியில் அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு வெற்றி மடிக்கணினி திட்டம்

அரசுக் கல்லூரி மாணவர்களுக்கு வெற்றி மடிக்கணினி திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர் தங்கும் விடுதி வசதிகளை மேம்படுத்த ரூ.10 கோடி ஆரம்ப மூலதனத்துடன் தமிழ்நாடு மாணவர் தங்கும் விடுதி மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனம் அமைக்கப்படும்.

இதன் மூலம், ரூ.3,200 கோடி மதிப்பீட்டில் அரசு - தனியார் கூட்டு முயற்சி திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் படுக்கை வசதிகளுடன் 200 ஒருங்கிணைந்த மாணவர் விடுதிகள் கட்டப்படும். 2027-28-ம் கல்வி ஆண்டில் மதுரையில் சீர்மிகு சிறப்பு சட்டப்பள்ளி தரத்தில் மேம்பட்ட சட்டக்கல்வி வழங்க 300 மாணவர்களுடன் சிறப்பு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும். பட்ஜெட்டில் உயர்கல்வித் துறைக்கு ரூ.8,393 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

'சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்' - அரசுப் பள்ளிகளில் தூய்மை பராமரிப்புக்கு புதிய திட்டம்

அரசுப் பள்ளிகளில் 'சூப்பர் க்ளீன், சூப்பர் கேம்பஸ்' (Super Clean, Super Campus) என்ற புதிய திட்டத்தின்கீழ் தினசரி தூய்மை பணிகள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகங்களுக்கு 24 மணி நேர பாதுகாப்பு உறுதிசெய்யப்படும். முதல்கட்டமாக 10 ஆயிரம் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக பட்ஜெட்டில் ரூ.139 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளை நவீனப்படுத்தும் நோக்கில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக 'ஒரு பள்ளி நிறைவு திட்டம்' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2,514 தொடக்கப் பள்ளிகள், 365 நடுநிலைப் பள்ளிகள், 855 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 3,734 பள்ளிகளில் ரூ.2,132 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதற்காக பட்ஜெட்டில் ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.




சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருந்து வரும் கல்வித் திறன்மிக்க மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கும் நோக்கில் பெருந்தலைவர் 'காமராஜர் சிறப்புப் பள்ளிகள்' என்ற பெயரில் நவீன உண்டு உறைவிட பள்ளிகள் நிறுவப்படும். 6 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பயிலும் இந்த பள்ளிகளில் கல்வி, உணவு, தங்குமிடம், பாடபுத்தகங்கள், சீருடைகள் வழங்கப்படும். இப்பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி பாடத்திட்டத்தை மறுசீரமைக்க ரூ.25 கோடி ஒதுக்கப்படுகிறது.

11-ம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.277 கோடி செலவில் ஹெல்மெட் வசதியுடன் நவீன சைக்கிள்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் நடப்பு கல்வி ஆண்டில் 11-ம் வகுப்பு பயிலும் சுமார் 5.32 லட்சம் மாணவர்களுக்கு ரூ.277 கோடி மதிப்பீட்டில் ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் வசதியுடன் கூடிய நவீன பிராண்டட் சைக்கிள் வழங்கப்பட உள்ளது. தன்னை உயிராக நேசிக்கும் ஜென்-ஸி தலைமுறையை தலைசிறந்த தலைமுறையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் உறுதியாக உள்ளார். அதன் வெளிப்பாடே இந்த மேம்படுத்தப்பட்ட செயல்திட்டம். பட்ஜெட்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,527 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## டிஜிட்டல் நூலகங்கள்

அரசு பொது நூலகங்களை மாநில அளவிலான டிஜிட்டல் நூலகங்களாக மறுவடிவமைப்பு செய்வதன் மூலம் டிஜிட்டல் அறிவு, ஒற்றை உறுப்பினர் சேர்க்கை, 24 மணிநேர இணைய வசதி, கைபேசி மூலம் அணுகும் வசதி, டிஜிட்டல் உள்ளடக்கம், இலவச வை-பை வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த முடியும். அந்த வகையில் பொது நூலகங்களை மறுவடிவமைப்பதற்கு ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 'சிங்கப்பெண்' அதிரடிப் படைக்கு ரூ.354 கோடி

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படைக்கு தேவையான காவலர்கள், கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள், பயிற்சி மற்றும்செயல்பாட்டுத் தேவைகளுக்காக ரூ.354 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

போதை 'மறுவாழ்வு நிதி' போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க, சட்டத்தை கடுமையாக அமல்படுத்துவதுடன், மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. போதைப் பொருள் தொடர்பான குற்றங்களைக் கண்டறிந்து, கடும் நடவடிக்கை எடுப்பதற்காக,

# மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு ரூ.500 கோடியில் 1,000 ஏசி மின் பேருந்துகள்



தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சர் மரிய வில்சன் நேற்று பட்ஜெட் தாக்கல் செய்தார். அதில் சென்னை மாநகர வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து கூறியிருப்பதாவது: நடப்பு நிதியாண்டில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்துக்கு குளிர்சாதன வசதிகளைக் கொண்ட 1,000 புதிய மின்சாரப் பேருந்துகள் வாங்கப்படும்.

பேருந்து பணிமனைகளில் மின்சாரப் பேருந்துகளுக்கான மின்சாரம் மற்றும் இயந்திரவியல் சார்ந்த வசதிகளை ஏற்படுத்துவதற்காக திருத்த வரவு -செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக ரூ.7,675 கோடி, செயல்திறன் இடைவெளி நிதியுதவி ரூ.2,650 கோடி, பங்கு மூலதன உதவியாக ரூ.1,005 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்தத் திருத்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்கு ரூ.13,561 கோடி ஒதுக்கப்படுகிறது.

**மெட்ரோ திட்டங்கள்:** சென்னை விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரை, ஆவடி வழியாக கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரை, ஸ்ரீபெரும்புதூர் மார்க்கத்தில் பூந்தமல்லி முதல் சுங்குவார்சத்திரம் வரை கூடுதல் மெட்ரோ ரயில் வழித்தடத் திட்டங்களுக்கு மத்திய அரசு விரைவான ஒப்புதல் வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் இருந்து கர்நாடக மாநிலம் பொம்மசந்திரா வரை மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய, கர்நாடக அரசுகளுடன் இணைந்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.9,300 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாநில நெடுஞ்சாலைகளை 4 வழிச் சாலைகளாக அகலப்படுத்துதல், புறவழிச் சாலைகள் அமைத்தல் உட்பட பல அம்சங்கள் அடங்கும்.

சாலைப் பாதுகாப்பை உறுதி செய்ய, பாதுகாப்பான சாலைகள் இயக்கம் அறிமுகப்படுத்தப்படும். சாலைகள் வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு ஆகியவற்றில் தனி கவனம் செலுத்தக் கூடிய இந்த இயக்கத்தில், செயற்கை நுண்ணறிவின் மூலம் வேகக் கட்டுப்பாடு விதிமீறல்களைக் கண்காணித்தல், சாலை ரோந்துப் பிரிவு மற்றும் தீவிர காயங்களுக்கான சிகிச்சை மையங்கள் அமைத்தல் ஆகியவை அடங்கும்.

தமிழகத்தில் பல சாலைகள் போதிய பராமரிப்பின்றி குண்டும் குழியுமாக இருப்பதால் பயணிப்பது சவாலாகவே உள்ளது. இச்சாலைகளைச் சரி செய்ய திருத்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.250 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. சாலைகளில் குறைகள் இருக்கும் பட்சத்தில் பொதுமக்கள் 'நம்ம சாலை செயலி'யின் மூலம் உடனுக்குடன் புகைப்படம் எடுத்து தகவல் தெரிவிக்கலாம். இக்குறைகள் துரிதமாக சீர்செய்யப்படும்.

**காவலர் குடியிருப்பு:** ஐந்து ஆயிரம் காவலர் குடும்பங்கள் பயனடையும் வகையில் போலீஸ் குடியிருப்பு வளாகங்கள் கட்ட ரூ.431 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல்வர் விபத்து நிவாரண நிதித் திட்டத்துக்காக 2026-27-ம் ஆண்டுக்கான திருத்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.200 கோடி ஒதுக்கப்படுகிறது. மேலும், 2026-27-ம் நிதியாண்டில் பல்வேறு சாலைப் பாதுகாப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்காகச் சாலைப் பாதுகாப்பு நிதியின் கீழ் ரூ.130 கோடி ஒதுக்கப்படுகிறது.

சட்டம் - ஒழுங்கை சிறப்பாகப் பராமரிக்க, குற்றங்களைக் கட்டுப்படுத்த, காவல் துறையினருக்கு போதுமான குடியிருப்பு வசதிகள் இன்றியமையாதவை ஆகும். இந்த நோக்கில், மாவட்டங்களில் காவல் துறையினருக்கான குடியிருப்பு வளாகங்களைக் கட்டுவதற்காக ரூ.431 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 5,000 காவலர் குடும்பங்கள் பயனடையும். இந்த திருத்த வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கு ரூ.17,290 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

மாவட்டத்துக்கு ஓர் அலகு வீதம் 37 அலகுகள், நகர்ப்புறங்களில் 28 அலகுகள் என மொத்தம் 65 'போதைப் பொருள் தடுப்புப் பணிக் குழு' அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள் இல்லாத தமிழகத்தை உறுதிசெய்யும் நோக்கில், 'மறுவாழ்வு நிதி' உருவாக்கப்படுகிறது. இந்த நிதிக்காக ரூ.70 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. போதைப் பொருள் மற்றும் போதைப் பழக்கத்தில் இருந்துவிடுபடவும், அதில் இருந்து மீண்டு வரவும், உதவி தேவைப்படுவோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவே இந்த நிதி பயன்படுத்தப்படும்.



## அம்பேத்கர் உதவித் தொகை

புகழ்பெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பயனடையும் வகையில் 'அண்ணல் அம்பேத்கர் அயல் நாட்டுக் கல்வி உதவித்தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ்ஒரு மாணவருக்கு அதிகபட்சமாக ரூ.36 லட்சம் வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது. நடப்பாண்டில், 362 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.131 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

# “அரசியலை விட விவசாயிகளின் நலனே முக்கியம்”

## ஆக.13 முழு அடைப்பை வாபஸ் பெற வலியுறுத்தல் காவிரி விவகாரத்தில் டி.கே.சிவகுமார் உறுதி

‘காவிரி விவகாரம் எங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. அரசியலை விட மாநிலத்தின் விவசாயிகளின் மற்றும் மக்களின் நலன்களே மிக முக்கியமானவை’ என கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

காவிரி நீர் பகிர்வு விவகாரத்தில் மாநிலத்தின் சட்டரீதியான மற்றும் அரசியல் ரீதியான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து திட்டமிடுவதற்காக இன்று கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது.

தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு தினமும் 3,500 கன அடி நீரைத் திறந்துவிடுமாறு காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு பிறப்பித்த உத்தரவை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார், “காவிரி விவகாரம் எங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகவே இருந்து வருகிறது. அரசியலை விட மாநிலத்தின் விவசாயிகளின் மற்றும் மக்களின் நலன்களே மிக முக்கியமானவை.

மாநிலத்தின் நலன் சார்ந்த விவகாரங்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தின் குடிநீர்த் தேவைக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டை நீங்கள் அனைவரும் முழுமையாக ஏற்றுக்கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியும்.



நான் முன்னாள் முதல்வர்கள் பசவராஜ் பொம்மை மற்றும் ஜெகதீஷ் ஷெட்டர் ஆகியோரையும் சந்தித்து கர்நாடகாவின் கவலைகளை விளக்கினேன். அவர்களும் கர்நாடகாவின் கவலைகளை மத்திய அரசிடம் எடுத்துரைத்தனர். அவர்களின் ஆதரவுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்று தெரிவித்தார்.

முதல்வர் சிவகுமாரின் இல்லத்தில் இன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், வீரப்ப மொய்லி (காங்கிரஸ்), சித்தராமையா (காங்கிரஸ்), பி.எஸ். எடியூரப்பா (பாஜக), எச்.டி. குமாரசாமி (ஜேடிஎஸ்), டி.வி. சதானந்த கௌடா (பாஜக) மற்றும் பசவராஜ் பொம்மை (பாஜக) ஆகிய ஆறு முன்னாள் முதல்வர்கள் பங்கேற்றனர்.

காவிரி விவகாரத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒத்துழைப்பு அளித்ததற்காக அனைவருக்கும் அவர் தனது பாராட்டுகளை தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் பாஜக எம்எல்ஏவும் மாநில சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர்.அசோக்கும் கலந்து கொண்டார்.

தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிடக் கூடாது என்று மாநில அரசிடம் உறுதிமொழி கோரியதுடன், இந்தக் கூட்டத்தைப் புறக்கணிக்கப் போவதாகவும் பாஜக மிரட்டியிருந்தது. இருப்பினும், கட்சிக்குள் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்திற்குப் பிறகு இக்கூட்டத்தில் பங்கேற்க முடிவெடுத்தது. இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

மேலும், தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆகஸ்ட் 13-ம் தேதி அறிவிக்கப்பட்டிருந்த முழு அடைப்புப் போராட்டத்தை வாபஸ் பெறுமாறு எதிர்க்கட்சிகள், விவசாயிகள் மற்றும் கன்னட அமைப்பினரை கர்நாடக முதல்வர் சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.

## கபினியில் நீர் திறப்பு அதிகரிப்பு:

# விநாடிக்கு 25,000 கன அடி நீர் வெளியேற்றம்



கர்நாடக மாநிலம் கபினி அணையில் இருந்து நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அணை அதன் முழு கொள்ளளவை எட்டிய நிலையில் வினாடிக்கு 25,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான ஷிமோகா, குடகு, தலைக்காவிரி, பாகமண்டலா ஆகிய இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மைசூரு எச்.டி.கோட்டையில் உள்ள கபினி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இரவு 8 மணி நிலவரப்படி 2,284 அடி முழு கொள்ளளவைக் கொண்ட கபினி அணையின் கொள்ளளவு 2,282 அடியை எட்டியது. அணையின் பாதுகாப்பை கருதி விநாடிக்கு சுமார் 25,000 கன அடி நீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே காவிரி கரையோரத்தில் உள்ள கிராமங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பதிவாகும் வழக்கமான அளவுக்கு தென்மேற்குப் பருவமழை பெய்யவில்லை. இதனால் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய 4 அணைகளுக்கும் போதிய நீர்வரத்து இல்லாமல் வறண்டு காணப்பட்டன.

இதனால், உச்ச நீதி மன்ற தீர்ப்பின் படி ஜூன், ஜூலை மாதங்களில் தமிழகத்துக்கு திறக்க வேண்டிய நீரை கர்நாடக அரசு திறக்கவில்லை. தமிழக அரசு கடந்த 28-ம் தேதி காவிரி ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில் முறையிட்டதை அடுத்து, 15 நாட்களுக்கு தமிழகத்துக்கு விநாடிக்கு 3,500 கன அடி நீரை திறந்துவிட வேண்டும் என ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து காவிரி மேலாண்மை ஆணையத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்தது. கர்நாடகாவின் கோரிக்கையை நிராகரித்த மேலாண்மை ஆணையம், தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு 3,500 கன அடி நீரை திறந்து விடுமாறு உத்தரவிட்டது. இதை கண்டித்து கர்நாடகாவில் கன்னட அமைப்பினர், விவசாய அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சூழலில் கடந்த சில தினங்களாக கர்நாடக மாநிலத்தின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பொழிவு அதிகரித்தது. காவிரியின் முக்கிய துணை நதியான கபினி உற்பத்தியாகும் கேரள மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால், கபினி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் அணையின் பாதுகாப்பு கருதி, தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 25,000 கன அடி நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு காவிரி நீரை கர்நாடகா தர மறுத்த நிலையில் இயற்கையின் கொடையாக மழை பொழிவு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திமுக ஆர்ப்பாட்டத்தில் ஆபாசமாகப் பேசியதாக வழக்கு:

# உதயநிதி கைதாகி விடுதலை



சென்னை நீலாங்கரை இல்லத்தில் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினை கைது செய்த போலீஸார், அவரை வாகனத்தில் ஏற்றி தஞ்சைக்கு அழைத்து சென்றனர். அப்போது தொண்டர்களைப் பார்த்து கையசைத்த உதயநிதி.

தஞ்சாவூரில் நடைபெற்ற திமுக ஆர்ப்பாட்டத்தில் ஆபாசமாகப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். அவரை தஞ்சாவூர் அழைத்து சென்று விசாரணை நடத்திய போலீஸார், இரவு விடுவித்தனர்.

காவிரி நதிநீர் விவகாரம் தொடர்பாகத் தஞ்சாவூரில் நேற்றுமுன்தினம் திமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அப்போது, பெண்களை இழிவுபடுத்தும் வகையில் இரட்டை அர்த்தத்தில் கருத்து தெரிவித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாகத் தவெக மகளிரணி சார்பில், தஞ்சாவூர் டவுன் கிழக்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், 9 பிரிவுகளின் கீழ் உதயநிதிக்கு எதிராகப்

## முழு விவரம்

போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதையடுத்து, தஞ்சாவூர் போலீஸார் நேற்று காலை 7 மணியளவில் சென்னை போலீஸாரின் உதவியுடன் நீலாங்கரையில் உள்ள உதயநிதி ஸ்டாலின் இல்லத்துக்குச் சென்றனர். வீட்டைச் சுற்றி பலத்த போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டது.

போலீஸார் வீட்டுக்குள் சென்று வழக்கு தொடர்பான ஆவணங்களை வழங்கி, கைது செய்வதாகத் தெரிவித்தனர். அப்போது உதயநிதியின் மனைவி கிருத்திகா மற்றும் முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், “வழக்கறிஞர்கள் வர உள்ளனர். அதுவரை காத்திருங்கள்” என்று கேட்டுக் கொண்டனர்.

ஆனால், போலீஸார் கைது நடவடிக்கை தொடரும் என்று தெரிவித்தனர். இதற்கிடையில், திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன், முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, தொழிலதிபர் சபரீசன் (மு.க.ஸ்டாலின் மருமகன்), கட்சியின் சட்டத் துறை நிர்வாகிகள் உட்பட பலர் உதயநிதி இல்லத்துக்கு விரைந்து வந்தனர்.

தொண்டர்கள் அதிக எண்ணிக்கையில் திரண்டதால், போலீஸார் இரும்பு தடுப்புகளை அமைத்து பாதுகாப்பைப் பலப்படுத்தினர். எனினும், திமுகவினர் போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு சாலை மறியல் செய்தனர். நீண்ட நேர பரபரப்புக்குப் பிறகு, காலை 10.30 மணிக்கு மேல் போலீஸார் உதயநிதி ஸ்டாலினைக் கைது செய்து வேனில் ஏற்றினர்.

உதயநிதியை அழைத்துச் சென்ற போலீஸ் வாகனத்தைத் தடுத்து நிறுத்திய திமுகவினர், அரசுக்கு எதிராகக்

# திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயன் ஜாமீனில் விடுவிப்பு

**மற்றொரு அவதூறு வழக்கு வேறு நீதிமன்றத்துக்கு மாற்றம்**



தமிழக முதல்வர் குறித்து அவதூறு பேசியதாக கைது செய்யப்பட்ட மார்க்கண்டேயன் எம்எல்ஏ நேற்று ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இதேபோல் 2023-ல் பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கின் விசாரணை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

முதல்வர் விஜய் குறித்து அவதூறாகவும், மிரட்டும் தொனியிலும் பேசியதாக விளாத்திகுளம் தொகுதி திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டு, கடந்த மாதம் 20-ம் தேதி பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு, சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ஜாமீன் வழங்கியது.

இதுதொடர்பான நீதிமன்ற உத்தரவு நகல் கிடைக்கப்பெற்றதை அடுத்து, பாளையங்கோட்டை மத்திய சிறையிலிருந்து அவர் நேற்று விடுவிக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளியே வந்த அவருக்கு திமுகவினர் மாலை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தூத்துக்குடி மாவட்டத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டதால் தான் எனது வார்த்தைகள் கடுமையாக இருந்தன. முதல்வர் குறித்துஅதிகமாக பேசக்கூடாது எனக் கூறியுள்ளனர்.

சட்டப்பேரவையில் பங்கேற்கத்தான் எனக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. சிறையில் எத்தனை ஆண்டுகள் இருந்தாலும் ஜனநாயகத்தை காப்பாற்றும் போராட்டம் தொடர்வோம். இவ்வாறு கூறினார்.

**வழக்கு மாற்றம்:** இதேபோல் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தைச் சேர்ந்த பார்த்திபன், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், விளாத்திகுளம் திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயன் கடந்த 2023 ஜன.6-ல் நடந்த கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் இறப்புக்கு பிரதமர் நரேந்திர மோடி காரணம் என்று பேசியதோடு, தொடர்ச்சியாக பாஜக தலைவர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் மீது ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வருகிறார்.

இவர்மீது நடவடிக்கை எடுக்கஉத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.இந்த மனு நீதிபதி எல்.விக்டோரியா கௌரி முன்பு விசாரணைக்கு வந்தது. இதில் அரசுத் தரப்பு வாதத்தை தொடர்ந்து, இந்த மனு மீதான விசாரணையை எம்.பி. எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு அமர்வுக்கு மாற்றி உத்தரவிட்டார். ●

---

கோஷங்களை எழுப்பினர். சிலர் போலீஸ் தடுப்புகளைத் தூக்கி வீசியதுடன், வாகனத்தின் முன்பாக சாலையில் படுத்து மறியல் செய்தனர். இதனால் போலீஸாருக்கும் திமுகவினருக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இந்த பரபரப்பில் 3 பேருக்கு காயம் ஏற்பட்டது.

பல இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர் சுமார் 2,000 பேரை போலீஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர். இதனால் பதற்றம் ஏற்பட்டது. இதேபோல், உதயநிதி ஸ்டாலின் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து தவெகவினர் வடக்கு கடற்கரை மற்றும் பரங்கிமலை பகுதியில் போராட்டம் நடத்தினர்.

தவெக எம்எல்ஏக்கள் பல்லவி மற்றும் தாமு தலைமையில் 100-க்கும் மேற்பட்ட தவெகவினர் உதயநிதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல் ஆணையர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

பின்னர் பலத்த பாதுகாப்புடன் உதயநிதி ஸ்டாலின் தஞ்சாவூர் அழைத்துச் செல்லப்பட்டார். மாலை 6.30 மணியளவில் திருச்சி வழியாக உதயநிதியை போலீஸார் தஞ்சாவூர் அழைத்து வந்தனர். ஆனால், திடீரென செங்கிப்பட்டி காவல் நிலையத்துக்கு உதயநிதியை அழைத்துச் சென்றனர்.

அங்கு, தனது வழக்கறிஞர்கள் வந்தால்தான் காவல் நிலையத்துக்குள் வருவேன் என்று கூறிய உதயநிதி வாகனத்தை விட்டு இறங்காமல் சுமார் அரை மணி நேரம் காத்திருந்தார். திமுக வழக்கறிஞர்கள் அங்கு வந்த பிறகு, வாகனத்தில் இருந்து உதயநிதி இறங்கி காவல் நிலையத்துக்குள் சென்றார்.

அங்கு தஞ்சாவூர் எஸ்.பி. சுந்தரவதனம் முன்னிலையில், தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் மணிகண்டன் விசாரணை நடத்தினார். அப்போது, போலீஸாரின் கேள்விகளுக்கு உதயநிதி பதிலளித்தார். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற விசாரணைக்குப் பிறகு 8.15 மணியளவில் உதயநிதியைப் போலீஸார் விடுவித்தனர்.

முன்னதாக நேற்று காலை 10.30 மணியளவில் உதயநிதி ஸ்டாலினுக்கு முன்ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீது விசாரணை நடந்த போது, "தஞ்சாவூரில் காவல் நிலைய விசாரணைக்குப் பிறகு அவர் விடுவிக்கப்படுவார். நீதிமன்ற காவலுக்கு அனுப்புவது எங்கள் நோக்கமல்ல" என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

அதைப் பதிவு செய்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், "உதயநிதியை விசாரணை முடிந்ததும் போலீஸார் இன்றே (நேற்று) விடுவிக்க வேண்டும். உதயநிதி ஸ்டாலினும் போலீஸாரின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார். ●

### சென்னையில் உலகளாவிய திறன் மையங்கள், உற்பத்தி திட்டம்:

# முதல்வர் விஜய் முன்னிலையில் 4 நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

தமிழகத்தில் உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உற்பத்தி திட்டம் மற்றும் தமிழகத்தின் முதல் சர்வதேசப் பல்கலைக்கழக வளாகத்தை நிறுவ முன்னணி நிறுவனங்களுடன் முதல்வர் விஜய் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ‘சப்’ நிறுவனம், தனது உலகளாவிய திறன் மையம் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த ‘நார்டெக்ஸ்’ நிறுவனம், தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஆகியவற்றை தமிழகத்தில் முதன் முறையாக நிறுவ முன்வந்துள்ளன.

இவ்விரு நிறுவனங்களின் முதலீடுகள் மூலம் மொத்தம் 1,220 உயர்தர ஊதியம் வழங்கும் வேலைவாய்ப்புகள் உருவாக் கப்படவுள்ளன. இந்த முதலீடுகள், உயர் மதிப்புடைய உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான முக்கிய சர்வதேச மையமாக சென்னை நகரின் நிலையை மேலும் வலுப்படுத்தும்.

மேலும், உயர்கல்வித்துறையில் ஆஸ்திரேலியாவின் முன்னணி ஆராய்ச்சி சார்ந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான ‘யுனிவர்சிட்டி ஆஃப் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா’ (யுடபிள்யுஏ), இந்தியாவில் தனது வளாகத்தை சென்னை நகரில் நிறுவ உள்ளது.




இது தமிழகத்தில் அமையவுள்ள முதல் சர்வதேசப் பல்கலைக்கழக வளாகமாகும். இந்தப் பல்கலைக்கழகம், க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையில் 77-வது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் முன்னிலையில், (30.7.2026) சென்னையிலுள்ள வழிகாட்டி நிறுவனத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வழிகாட்டி நிறுவனத்திற்கும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சப் (Chubb) நிறுவனத்திற்கும் இடையே 220 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் சென்னை மாநகரில் உலகளாவிய திறன் மையம் நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு.தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., சப் நிறுவனத்தின் உலகளாவிய பொறியியல் தலைவர் திரு. ரோஹின் கோவிந்தராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இடத்தைப் பிடித்துள்ளது.

சென்னைவேளச்சேரியில் ரூ.125 கோடி முதலீட்டில் இப்பல்கலைக் கழகம் உருவாக்கப்பட உள்ளது. இதன்மூலம் 200-க்கும் மேற்பட்டோருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல், கடந்த ஜூன் மாதம் தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, தென்கொரியா பயணித்தார். அதன் தொடர்ச்சியாக, அந்நாட்டின் முன்னணி வாகன உதிரிபாக உற்பத்தி நிறுவனமான ‘மோட்டிவ்லிங்க்’, காஞ்சிபுரம் மாவட்டம் சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில் ரூ.300 கோடி முதலீட்டில் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்மூலம் 1,500 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும். சென்னை நந்தனத்தில் உள்ள வழிகாட்டி நிறுவன அலுவலகத்தில், தொழில்துறை சார்ந்த நிகழ்வில், முதல்வர் விஜய் முன்னிலையில் வழிகாட்டி நிறுவனம் மற்றும் முதலீடு நிறுவனங்கள் இடையிலான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்த முதலீடுகள், தமிழக இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதோடு, உலகளாவிய திறன் மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உயர் கல்வி மற்றும் மேம்பட்ட உற்பத்தி துறைகளுக்கான உலகளாவிய மையமாக தமிழகத்தை நிலைநிறுத் துவதில் முக்கியப் பங்காற்றும்.

இந்நிகழ்வில், அமைச்சர் எஸ்.கீர்த்தனா, தலைமைச்செயலர் மு.சாய்குமார், தொழில்துறை செயலர் ச.விஜயகுமார், ‘சப்’ நிறுவன உலகளாவிய பொறியியல் தலைவர் ரோஹின் கோவிந்த ராஜன், ‘நார்டெக்ஸ் குளோபல் ஷேர்டு சர்வீசஸ்’ நிறுவன மேலாண் இயக்குநர் சரவணன் மாணிக்கம், ‘யுனிவர்சிட்டி ஆஃப் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா’வின் இந்தியாவுக்கான தலைமைச் செயல்பாட்டு அலுவலர் டேவிட்தாஸ், ‘மோட்டிவ்லிங்க்’ நிறுவன தலைமைச் செயல் அலுவலர் கிம் கி ஹான் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ●









**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் முன்னிலையில், (30.7.2026) சென்னையிலுள்ள வழிகாட்டி நிறுவனத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வழிகாட்டி நிறுவனத்திற்கும், தென் கொரியா நாட்டின் முன்னணி வாகன உதிரிபாக உற்பத்தி நிறுவனமான மோட்டிவ்லிங்க் (MotiveLink) நிறுவனத்திற்கும் இடையே, 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காவில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் முனைவர் மு.சாய்குமார், இ.ஆ.ப., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு.தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., மோட்டிவ்லிங்க் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. கிம் கி ஹான், மோட்டிவ்லிங்க் இந்தியாவின் மேலாண்மை இயக்குநர் திரு. ஹாங் சாங் ஜூன், மேலாளர்கள் செல்வி பித்யா ஷர்மா மற்றும் திரு. அதுல் ஷாக்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

# “தொகுதி மறு வரையறைக்கு எதிராக ஒவ்வொரு தமிழரும் நிற்க வேண்டும்”



**‘தொகுதி மறு வரையறையை ஆதரிப்பவர்கள் தமிழகத்துக்கும், அதன் எதிர்காலத்துக்கும் துரோகம் செய்பவர்களாவர். ஒவ்வொரு தமிழரும் இதற்கு எதிராக நிற்க வேண்டும்.’ என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.**

## ராகுல் காந்தி வேண்டுகோள்

தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில், தமிழகத்தில் கட்சியை பலப்படுத்துவது தொடர்பான மாவட்ட தலைவர்கள் பங்கேற்கும் 10 நாட்கள் பயிற்சி மாமல்லபுரத்தில் நடைபெற்று வந்தது.

நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி நேற்று காலை சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து ராகுல் காரில் மாமல்லபுரம் செல்லும் வழியில் நெடுஞ்சாலையில் காத்திருந்த மாற்றுத்திறனாளி தொண்டரை பார்த்ததும் காரை நிறுத்தி, அவருடன் கலந்துரையாடினார். பின்னர் மாவட்ட தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்று ராகுல் காந்தி பேசியதாவது: தமிழகத்தில் காங்கிரஸ் வளர்ச்சிக்கு உட்கட்சி பூசல்களும், அணிகளும் முட்டுக்கட்டையாக உள்ளன. அதை தகர்க்க வேண்டும். அனைவரும் தலைமையின் அறிவுறுத்தல்களை ஏற்று பணியாற்ற முன்வர வேண்டும். கட்சித் தலைமைக்கு விசுவாசமாக உள்ளவர்களை கட்சி கைவிடாது.

கட்சியை பலப்படுத்த வேண்டும்: நிர்வாகிகளின் செயல்பாடுகளை டெல்லி தலைமை கண்காணித்து வருகிறது. தவறு செய்பவர்கள், நிர்வாகிகளை அரவணைத்து செல்லாத தலைவர்களுக்கு காங்கிரஸில் இடமில்லை. அதிக அளவில் இளைஞர்களைச் சேர்த்து கட்சியைப் பலப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், நீட் தேர்வால் மருத்துவர் ஆக முடியாமல் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார். அவர்களிடம் ராகுல் பேசியதாவது: “எந்த பெற்றோரும் தங்களது குழந்தையை இழந்து துயரத்தில் இருப்பதை காண்பதுபோல வேதனையானது வேறு எதுவும் இல்லை. கேள்வித்தாள்கள் கசிந்துவிடுகின்றன. தேர்வுகள் ரத்து செய்யப்படுகின்றன.

புளியரை வழியாக கேரளாவுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்ல

# 3 மாதங்களுக்கு தடை

## எல்லைப் பகுதிகளில் தீவிர கண்காணிப்புக்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

## தமிழக அரசு அதிரடி உத்தரவு;

தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களைத் தவிர பிற மாநிலங்களுக்கு ஜல்லிக்கல் (Rough Stone), எம்-சாண்ட், மெட்டல் ஜல்லி, கிரஷர் கற்கள் உள்ளிட்ட கனிம வளங்களை கொண்டு செல்ல 3 மாதங்களுக்கு தற்காலிகத் தடை விதித்து தமிழ்நாடு புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநர் டி.டி. பிரபுசங்கர் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவின் அடிப்படையில், தென்காசி மாவட்டம் புளியரைகேரள எல்லை வழியாக கேரள மாநிலத்திற்கு ஜல்லிக்கல், எம்-சாண்ட் மற்றும் பிற கனிம வளங்களை ஏற்றிச் செல்லவும் தடை அமலுக்கு வந்துள்ளது. இதையடுத்து புளியரை உள்ளிட்ட மாநில எல்லைச் சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட உள்ளது. சட்டவிரோத கனிமக் கடத்தலைத் தடுக்கவும், தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான கனிம வளங்கள் போதுமான அளவில் கிடைப்பதை உறுதி செய்யவும், சாலைகள் சேதமடைவதைத் தடுப்பதற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லை மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறை அதிகாரிகள் இணைந்து புளியரை உள்ளிட்ட அனைத்து மாநில எல்லைச் சோதனைச் சாவடிகளிலும் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு,




தடையை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறி கனிம வளங்களை பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்ல முயற்சிப்பவர்கள் மீது சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்டவிரோத கனிம அகழ்வு, போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு விதிகளின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவில் எச்சரிக்கப்பட்டுள்ளது. ●

பல ஆண்டுகள் உழைப்பு ஒரே இரவில் வீணாகின்றன. நேர்மையாக உழைக்கும்படி மாணவர்களிடம் சொல்லப்படுகிறது, ஆனால் அந்த அமைப்பு நேர்மையற்றதாக இருக்கிறது. பிரதமர் மாணவர்களை ‘மன்னிக்கவேண்டும்’ என்று பேசுவது மிகப்பெரிய அவமானம். துயரத்தில் இருக்கும் பெற்றோரையோ, எதிர்காலம் பாதிக்கப்பட்ட ஒரு மாணவர் கூடவோ பிரதமர் உட்கார்ந்து பேசவில்லை” என்றார்.

பாஜகவின் சதி முயற்சி: தொடர்ந்து, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சு.திருநாவுக்கரசர், கே.வீ.தங்கபாலு, கே.எஸ்.அழகிரி, செல்லகுமார் உள்ளிட்டோருடன், தமிழக காங்கிரஸ் வளர்ச்சி தொடர்பாக ஆலோசனை நடத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாஜக மேற்கொள்ளும் தொகுதி மறுவரையறை முயற்சி, தமிழக மக்களிடமிருந்து அதிகாரத்தை பறிக்க உருவாக்கப்பட்ட ஒன்று. இது ஒரு சதி முயற்சியாக பார்க்கப்படுகிறது. தமிழக வரலாற்றில் ‘எட்டப்பன்’ என்ற பாத்திரம் தமிழகத்துக்கு துரோகம் செய்த ஒருவரின் குறியீடாக கருதப்படுகிறார்.

அதேபோல், தொகுதி மறு வரையறையை ஆதரிப்பவர்கள் தமிழகத்துக்கும், அதன் எதிர்காலத்துக்கும் துரோகம் செய்பவர்களாவர். மேலும் ஆர்எஸ்எஸ், பாஜக தமிழகத்தையும், தமிழக மக்களையும் தாக்க அனுமதிக்கிறார்கள். ஒவ்வொரு தமிழரும் இதற்கு எதிராக நிற்க வேண்டும். அனைத்து தமிழக கட்சிகளும், தேசிய கட்சிகளும், இந்த முயற்சியை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

அகில இந்திய பொதுச் செயலாளர் குலாம் அகமது மிர், அமைச்சர்கள் செ.ராஜேஷ்குமார், பெ.விஸ்வநாதன் மாநில முன்னாள் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, தேசிய செயலாளர் நிவேதித் ஆல்வா, மாநில பொதுச்செயலாளர் சிரஞ்சீவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ●

# இனி நாம் எல்லாம் ஹீரோ தான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்




அடுத்த ஸ்டாப் வந்ததும் அதில் அந்த முந்தைய ஸ்டாப்பில் இறங்க வேண்டிய பயணியை இறங்கச் சொன்னார். அந்தப் பயணி வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டே இறங்கிப் போனார். அங்கிருந்து பேருந்து கிளம்பியது. சிறிது தூரம் சென்றதும் ஜெயங்கொண்டம் பஸ் ஸ்டாப் வந்தது. அதில் இறங்க வேண்டிய பயணிகள் எல்லாம் இறங்கினார்கள். அதில் சோழகரம் புடைவூரில் இருந்து ஜெயங்கொண்டம் ஆஸ்பத்திரியில் அடிபட்டு சிகிச்சை செய்து கொண்டிருக்கும் பக்ரியையும், ஜெயமூர்த்தி தந்தை ராமசாமியையும் பார்க்கப் போன பெண் நண்பர்களும், "எங்கே ஆஸ்பத்திரி?" என்று பார்ப்பவர்களிடம் விசாரிக்கவும் செய்தார்கள். அப்படி விசாரிக்கும் போது ஒருவர் சொன்னார், "அதோ அங்க தெரியுது பார். இரண்டு பில்டிங்கைத் தாண்டி ஒரு சைக்கிளில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கைக் குழந்தையோட சைக்கிளில் இருந்து இறங்குறாங்க பார். அதுதான் ஆஸ்பத்திரி வாசல்" என்றார்.

"சரி வாங்கடி" என்று பெண் நண்பர்கள் எல்லாம் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றார்கள். அங்கே ஆஸ்பத்திரி வாசலின் அருகில் கைக் குழந்தை அழுவதை பெற்றோர்கள் சமாதானம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தக் குழந்தையின் கால்களிலும் ஒரு கையிலும் காயங்கள் மேல் மருந்து போட்டு இருந்தது. இதைப் பார்த்த பெண் நண்பர்கள் எல்லாம் குழந்தையின் பெற்றோரிடம் விசாரித்தார்கள்.

"என்னம்மா குழந்தைக்கு காயங்கள்?" என்றார்கள்.

அதற்கு கைக் குழந்தையை வைத்திருந்த பெண் சொன்னாள், "சோறு வடிச்ச தண்ணி ஆற வைத்திருந்தேன். கொஞ்சம் கழிச்சு ஆறுனா குடிக்கலாம் நினைச்சேன். ஆனா என் குழந்தை விளையாடுற பொம்மைகளை வைத்து விளையாடிக்கிட்டு இருந்துச்சு. அந்தப் பொம்மை குழந்தையின் கையில் இருந்து தவறி ஆறவைத்த கஞ்சி தண்ணீரில் விழுந்து விட்டது. அதை எடுக்கிறேன் என்று கை, காலில் கொட்டியதால் இந்தக் காயங்கள். வலி பொறுக்காமல் அழுது கொண்டே இருக்கிறாள்" என்று அந்தக் குழந்தையின் தாய் சொன்னாள்.



இதைக் கேட்டுக் கொண்டிருந்த பெண் நண்பர்கள் அந்தக் குழந்தையைத் தடவிக் கொடுத்து, "அழகான குழந்தை நீ. செல்லம் தானே நீ? உன் அம்மா பேச்சு கேப்ப இல்ல? நீ அழலாமா?" என்று குழந்தையின் கன்னத்தைத் தொட்டு முத்தமிட்டு டாட்டா சொல்லி அங்கிருந்து ஆஸ்பத்திரி உள்ளே சென்றார்கள்.

அங்கு ராமசாமியின் மனைவி தங்கம்மாள் அங்கு வரிசையாக சேர் போட்டு இருந்தார்கள். ஆட்களோடு ஆளாக எதையோ யோசித்துக்கொண்டு அமர்ந்து இருந்தாள். தங்கம்மாவைக் கண்ட பெண் நண்பர்கள் எல்லாம் அருகில் சென்று, "என்னம்மா ராமசாமி அண்ணன் எப்படி இருக்கார்?" என்றார்கள்.

அதற்கு தங்கம்மாள் சொன்னாள், "என்னம்மா பண்றது? இப்படி ஆயிட்டோமா? என் பையனை அடிக்கப் போய் அவர் கீழே விழுந்து அடிபட்டு இப்படி ஆஸ்பத்திரியில் வந்து கிடக்குமா? என்னம்மா பண்றது?" என்று மன வருத்தத்துடன் கண்கலங்கி கண்ணீர் சிந்திப் பேசினாள்.

அங்கு டீக்கடையில் டீ குடித்து விட்டு ஊர்காரர்களுள் ராஜேந்திரனிடம், "நாங்க ஊருக்குப் போறோம். நீ உங்க

பையன் பக்கிரியை கவனித்து பாத்துக்கப்பா தாங்கள் போயி வாரம் என்றார்கள் ஊர்காரர்கள் அம்மாவை வீட்டுக்கு அனுப்பி வை. ராத்திரிக்கு அவங்க இங்க தங்க வேண்டாம். ஆஸ்பத்திரியில் நீங்க தங்கி கவனிச்சுக்க. உன் அப்பாவையும் பக்ரியையும் என்றார் ஊர்காரர்கள். ஜெயமூர்த்தி இடம் சரி அண்ணே என்றான் ஊர் காரர்களிடம் ஜெயமூர்த்தி.



அதற்கு பக்ரியின் தந்தை சொன்னார், "ராஜேந்திரன், நான் இங்கு ஆஸ்பத்திரில்தான் அவங்களுக்கு துணையாகத் தங்கி இருக்கப் போறேன். நீங்க போங்கப்பா. நான் காலையில வாரேன்" என்றார்.

ராஜேந்திரன், "சரிப்பா" என்று அங்கிருந்து ஊர்க்காரர்கள் சோழபுரம் புடைவூருக்கு பஸ் பிடித்து கிளம்பினார்கள். ஜெயமூர்த்தியும் ராஜேந்திரனும் சிகிச்சை பெற்று வரும் ராமசாமியையும் பக்ரியையும் கவனிக்க ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள்.

அங்கே ஆஸ்பத்திரிக்குள்ளே ஜெயமூர்த்தி தாயிடம் ஊர்க்கார பெண் நண்பர்கள் எல்லாம் பேசிக் கொண்டு இருந்தார்கள். ஜெயமூர்த்தி அவர்களைப் பார்த்து, "ஏய், எல்லாம் என்ன ஒண்ணா வந்து இருக்கீங்க? நைட் டைம்ல?" என்றான்.

ஜெயமூர்த்தி அருகில் இருந்த ராஜேந்திரனும், "வாங்கம்மா, எப்ப வந்தீங்க?" என்று விசாரித்தார்.

அதற்கு பெண் நண்பர்கள், "இப்பதான் வந்தோம் அண்ணே" என்றார்கள்.

அதில் ஒரு சில பெண்கள் ராஜேந்திரனிடம் கேட்டார்கள். இன்னும் ஒரு சில பெண்கள் தங்கம்மாளிடம் விசாரித்தார்கள்.

"அண்ணே, வெளியே இருந்து வரீங்களே, எங்க போயிட்டு வரீங்க?"

அதற்கு ராஜேந்திரன் சொன்னார், "நம்ம ஊர்க்காரங்க எல்லாம் இங்க வந்து என் பையனையும் ராமசாமியையும் பார்க்க வந்தாங்க. அவங்க ஊருக்குப் போறாங்க. அதனால டீக்கடைக்குப் போய் டீ குடிச்சிட்டு அவங்கள ஊருக்கு அனுப்பிட்டு வாரேன்" என்றார் ஊர்க்கார பெண் நண்பர்களிடம்.

அதற்குப் பெண் நண்பர்கள் எல்லாம் கேட்டார்கள், "உங்க பையன் எப்படி இருக்காங்க?"

"அவனுக்கும் ராமசாமிக்கும் சிகிச்சை செய்து கொண்டு இருக்காங்க. அவர்களுக்கு மருந்து போட்டு குளுக்கோஸ் பாட்டில் ஊசி போட்டு மருந்து ஏத்திக்கொண்டு இருந்தார்கள். நாங்கள் டீ குடிச்சிட்டு வந்து இப்போதான் போய்ப் பார்க்கணும்" என்றார் ராஜேந்திரன்.

ஜெயமூர்த்தி தாயிடம் கேட்டார்கள் பெண் நண்பர்கள், "அம்மா, உங்க வீட்டுக்காரர் ராமசாமி அண்ணன் எப்படிம்மா இருக்காங்க? போய்ப் பார்த்தீங்களா?"

அதற்கு தங்கம்மாள் சொன்னாள், "நாங்கள் அப்பவே போய்ப் பார்த்தோம்மா. அவர்கள் மருந்து போட்டு குளுக்கோஸ் ஏற்றிக்கொண்டு ஊசி போட்டிருந்தார்கள். அவர்கள் தொந்தரவு எதுவும் செய்ய வேண்டாம் என்றார்கள். அதனால்தான் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறோம்மா. கொஞ்சம் கழிச்சு போய்ப் பார்க்கணுமா. நீங்களும் இப்படி உக்காருங்க. கொஞ்சம் கழிச்சு பார்க்கலாம்" என்றாள்.

பக்ரியையும் ராமசாமியையும் சைக்கிளில் ஆஸ்பத்திரிக்கு பார்க்க வந்த ஆண் நண்பர்களும் அங்கு வந்து, "எந்த வார்டு? என்ன நம்பர்னு தெரியலையேடா?" என்று ஒவ்வொருவரும் பேசி அங்கும் இங்குமாக எட்டிப் பார்த்தார்கள்.

அங்கே ஆஸ்பத்திரி உள்ளே ஜெயமூர்த்தி ஒரு கையில் டீயும், இன்னொரு கையில் பார்சலும் வைத்துக்கொண்டு ஆஸ்பத்திரி உள்ளே போனான். அவனைப் பார்த்த ஆண் நண்பர்கள், "ஏய் அதுபார் ஜெயமூர்த்தி போறான்டா. கூப்பிடுங்கடா" என்றார்கள்.

ரவி கூப்பிட்டான், "டேய் ஜெயமூர்த்தி! ஜெயமூர்த்தி!"

"ஏய் ரவியா?"

"வாங்கடா ரவி, ராஜ், அல்பர்ட், ரஹமத், மில்டன், கலியமூர்த்தி, பார்த்தசாரதி எல்லாம் வாங்கடா. என்னடா எல்லாம் நண்பர்களும் ஒண்ணா வந்து இருக்கீங்க?" என்றான் ஜெயமூர்த்தி.

இவர்களிடம் பேசிக் கொண்டு இருக்கும் போதே சோழபுரம் புடைவூர் சவுண்ட் சர்வீஸ் கடை நடத்திக் கொண்டிருக்கும் ராஜசோழனும், சைக்கிள் கடை நடத்திக் கொண்டிருக்கும் மணிமாறனும் அடிபட்டிருக்கும் பக்ரியையும் ராமசாமியையும் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு உள்ளே வந்தார்கள்.

அப்போது உள்ளே ஜெயமூர்த்தி நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தான். இவர்கள் சத்தமாகப் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த வாட்ச்மேன் ஜெயமூர்த்தியையும் ஜெயமூர்த்தி நண்பர்களையும் பார்த்து, "தம்பிகளா, கொஞ்சம் அமைதியா பேசுங்கப்பா. ஏன் இப்படி சத்தம் போட்டு பேசிட்டு இருக்கீங்க? எவ்வளவு பேஷன்ட் இருக்காங்க. நீங்க இவ்வளவு சத்தம் போட்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அவர்களுக்கு கொஞ்சம் கஷ்டமா இருக்கும்ல?" என்றார்.

அதற்கு நண்பர்கள் எல்லாம், "வாங்கடா, எல்லாம் ஓரமா போலாம். கஷ்டமாத்தான் இருக்கு. வாங்க வாங்க. ஓ சாரி அங்கிள். கோச்சுக்காதீங்க அங்கிள்" என்று அதிலிருந்த இளைஞர்கள் எல்லாம் கொஞ்சம் தள்ளி வந்தார்கள்.

அப்போது ராஜசோழனும் மணிமாறனும் ஆஸ்பத்திரி உள்ளே வந்து, "ஏய் ஜெயமூர்த்தி" என்றார்கள்.

"வாங்க வாங்க" என்றான்.

அவர்கள் இருவரும், "என்னடா, உங்க அப்பா எப்படி இருக்காங்க? பக்ரி எப்படி இருக்கான்?" என்று விசாரித்தார்கள்.

அதுபோல் வந்த ரவியுடன் வந்த நண்பர்களும், "டேய், உங்க அப்பா எப்படி டா இருக்காங்க? பக்ரி எப்படிடா இருக்கான்? என்னடா சிகிச்சை பண்ணிட்டு இருக்காங்க? நீ போய்ப் பாத்தியாடா உங்க அப்பாவையும் பக்ரியையும்?" என்று விசாரித்தார்கள்.

**(தொடரும்...)**

# சான்றோர் குரல்

**சந்தா விபரம்:**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER:
G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

**விளம்பர கட்டணம்**

| | |
|---|---|
| கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

Contact No: 99622 35002

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural saandrorkural@gmail.com Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE

# தமிழக வேளாண் பட்ஜெட் 2026–27 முக்கிய அம்சங்கள்

தமிழக சட்டப்பேரவையில் 2026-27-ம் நிதி ஆண்டுக்கான தவெக அரசின் முதலாவது பட்ஜெட் (ஆகஸ்ட் 5-ம் தேதி) தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து (ஆக.6) வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார்.

வேளாண் பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

› நஞ்சில்லா வேளாண் முறைகளை ஊக்குவித்து, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்க நீலகிரி மாவட்டம் ஊட்டியில் புதிய வேளாண் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும். இதற்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு

› உழவர் சந்தைகளை புனரமைக்க ரூ.20 கோடி ஒதுக்கீடு.

› 50 உழவர் சந்தைகளில் மின்னணு விலைப் பலகைகள் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு

› ரூ.4 கோடியில் வேளாண் நுண்ணறிவு மற்றும் சந்தை மகத்துவ மையம் அமைக்கப்படும்.

› 'வான்மகள்' திட்டம் - 100 மகளிர் உட்பட 500 நபர்களுக்கு ட்ரோன் இயக்கப் பயிற்சி உரிமம், 50 பயிற்சி பெற்ற மகளிருக்கு 50 சதவீத மானியத்தில் ட்ரோன்கள் வழங்க ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› நன்னெறி சாகுபடி; நஞ்சற்ற உற்பத்தி; உலகளாவிய ஏற்றுமதியை ஊக்குவிக்க ரூ.8.43 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› குறைந்த நீரில் அதிக மகசூல் உறுதி செய்ய நீர் மேலாண்மைக்கான துளித் துளித் தண்ணீர் திட்டம் செயல்படுத்தப்படும். 2.2 லட்சம் ஏக்கர் நிலம், 95,000 விவசாயிகள் பலனடைவர். இதற்காக ரூ.785 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› மதிப்புக் கூட்டுதலை மேம்படுத்த 4 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், 2 சிறப்பு வணிக வளாகங்கள் கட்டமைப்பு மேம்பாடு மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 2 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதிகள் ஏற்படுத்த ரூ.4.80 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› ரூ.5.20 கோடி செலவில் தமிழ்நாடு விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்படும்.

› திருக்கோவிலூர், முசிறி, காரைக்குடி, தாராபுரம்,கும்பகோணத்தில் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள் ரூ.4.6 கோடி செலவில் உருவாக்கப்படும்.

› இ-வாடகை 2.0 செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை வலுப்படுத்து 463 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்ய ரூ.20.31 கோடி ஒதுக்கீடு

› 100 விவசாயிகளுக்கு 50% மானியத்தில் கதிரடிக்கும் களங்கள் அமைக்க ரூ.2.8 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.




› ரூ.41 கோடியில் தென்னை சிறப்பு திட்டம், தென்னை டானிக் பூச்சி நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துதல், கரூர் மாவட்டத்தில் தென்னை நாற்றுப் பண்ணை, தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம், கொப்பரைக்கு விலை ஆதரவுத் திட்டம் அரசு செயல்படுத்தவுள்ளது.

› தென்னை சார்ந்த பொருட்களுக்கு லாபகரமான விலை கிடைக்கச் செய்ய ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தென்னை பதப்படுத்தும் கழகம் (TNCPC) அமைக்கப்படவுள்ளது.

› கடலோர மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக நன்னீர் கிணறுகள் அமைத்து மிளகாய் மற்றும் கொத்தமல்லி சாகுபடிக்கு டு.49.4 லட்சம் ஒதுக்கீடு.

› பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான 50 ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் ரூ.8.13 கோடி செலவில் அமைக்கப்படும்.

› 1000 விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியம் 80%மானியத்தில் மின்கட்டமைப்புடன் சாராத சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்க ரூ.23 கோடி ஒதுக்கீடு.

› மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து மற்றும் தென்னை ஆகியவற்றில் 100% மானியத்தில் 225 ஏக்கர் பரப்பளவில் தொடக்கம் முதல் இறுதி வரை இயந்திரமயமாக்குதலுக்கான செயல்விளக்கங்கள் அளிக்க ரூ.46.37 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› வேளாண் இயந்திரங்களைப் பழுது நீக்கி பராமரிக்கும் 15 மையங்கள் அமைத்திட 50% மானியம். இதற்காக ரூ.1.12 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கிராம அளவிலான 50 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் 80% மானியத்தில் அமைக்கப்படும். இதில் மகளிர்



சுய-உதவிக் குழுக்களுக்கு 30% ஒதுக்கீடு வழங்கப்படும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 100% மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகள் உருவாக்குதல் மற்றும் 75%மானியத்தில் 500 பண்ணைக் குட்டைகளை தூர் வாருதல் மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.8.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களின் களப்பயிற்சிக்காக 6 புதிய பேருந்துகள் வாங்க ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› தஞ்சை மாவட்டம், சாக்கோட்டையில், 'நம்மாழ்வார்' " பெயரில் ஒரு புதிய உயிர்ம வேளாண்மை பட்டயப் படிப்புக் கல்லூரி ரூ.5 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

› ஆயிரம் ஏக்கர் பாசனம் பரப்பை உருவாக்கிட பொதுப்பிரிவைச் சார்ந்த 500 விவசாயிகளுக்கு ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் பின்னேற்பு மானியத்தில் அமைத்தல் ஆகியனவற்றிற்கு அதிகபட்ச மானியம் 60% வழங்கப்படும். இதற்காக ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

› வேளாண் விளைப்பொருட்களுக்கு 100 சதவீதம் பயிர்க்காப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

› வேளாண் கண்காட்சி - தொழில்நுட்பமும் பாரம்பரியமும் சங்கமிக்கும் திருவிழா ரூ.3 கோடி செலவில் நடத்தப்படும்.

› உயிர்ம உரப் பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.4000 சிறப்பு ஊக்கதொகை வழங்கப்படும்.

› மாநில அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் விருது வழங்கப்படும். வெற்றியாளர்களுக்கு முதல் பரிசு ரூ.2 லட்சத்து 50 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.ஒரு லட்சத்து 50 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.ஒரு லட்சம் வழங்கப்படும்.

தகுதிகள்: சிறு, குறு விவசாயிகள் கம்பு, கேழ்வரகு, துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் நிலக்கடலை குறைந்தது 2 ஏக்கரில் சாகுபடி. தினை, சாமை, குதிரைவாலி மற்றும் எள் குறைந்தது 1 ஏக்கரில் சாகுபடி.செய்திருக்க வேண்டும்.

› மாவட்ட அளவில் 'வெற்றி விவசாயி விருது' வழங்கப்படும். முதல் பரிசு ரூ.50 ஆயிரம், இரண்டாம் பரிசு 25 ஆயிரம், தகுதிகள் : நெல் (இறவை & மானாவாரி) சோளம், கம்பு, மக்காசோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி குறைந்தது 2 ஏக்கர் சாகுபடி. செய்திருக்க வேண்டும்.

› 5 விவசாயிகளுக்கு சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது வழங்கப்படும். பரிசுத்தொகை ரூ.11லட்சம்

› விவசாயிகளின் அனைத்து தேவைகளுக்கும் 8 புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.27.82 கோடி செலவில் உருவாக்கப்படும்.

› வளமான மண்; வளமான வருங்காலம் என்பதால், மண்ணின் வளத்தை பாதுகாக்க 'தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்' ரூ. 122.51 கோடி செலவில் உருவாக்கப்படும்.

› திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.3.56 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› விதை சுத்திகரிப்புத் திறனை அதிகரிக்க 3 புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ரூ.7.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› 17,315 ஏக்கருக்கு விதைக்கரும்பு மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.9.36 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க ரூ.9 கோடி மதிப்பீட்டில் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

› ரூ.2 கோடி மதிப்பீட்டில் பனை பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப்படும். இதன் மூலம் பனை விதைகள், பனங்கன்றுகள் விநியோகம், பயிற்சி அளித்தல் மற்றும் பனைபொருள் உற்பத்திக் கூடாரங்கள் செயல்படுத்தப்படும்.

› 'வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டம்' - மாடித் தோட்டம் அமைக்க இடுபொருள் தொகுப்புகள், காய்கறி



விதைத் தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள், நீரியல் தோட்டம், செங்குத்துத் தோட்டம், நிழல்வலைக் குடில்கள் வழங்கப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

› தரமான விதை! வளமான விவசாயம் என்ற அடிப்படையில், நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்திற்கான மாநில அரசின் சிறப்புத் திட்டம் ரூ 34.72 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

› AI உழவர் செயலி - ஒவ்வொரு உழவருக்கும் தனிப்பயன் சேவைகள் வழங்க AI அடிப்படையிலான உழவர் செயலி உருவாக்கப்பட்டு ஸ்மார்ட் வேளாண்மை குறிப்புகள் வழங்கப்படும்.

› பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் தன்னிறைவுக்கான இயக்கம் ரூ.203.64 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

› சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறனை அதிகரிக்க 'தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்' ரூ..63.81 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

› 1 கோடி விவசாயிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் மண் வள அட்டைகள் வழங்கப்படும்.

› சாமை, தினை, வரகு, குதிரைவாலி, பனிவரகு போன்ற பயிர்களின் சாகுபடியை இருமடங்காக அதிகரிக்க 'தமிழ்நாடு குறுதானிய இயக்கம்'ரூ.7.61 கோடி மதிப்பீட்டில் இயங்கும்.

› அதிக ஊட்டச்சத்து நிறைந்த சீமைத் தினை (Quinoa), பாப்பரை (Buck Wheat) குலசாமை (Brown Top Millet) ஆகிய பயிர்களின் செயல்விளக்கத் திடல்கள் ரூ.30 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

› ரூ.27.21 கோடி மதிப்பீட்டில் பருத்தி உற்பத்தியைப் பெருக்கிட 'பருத்தி மறுமலர்ச்சி இயக்கம்' உருவாக்கப்படும்.

› ரூ.36 கோடி செலவில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

› விவசாய நிலங்களில் நிரந்தரப் பசுமைக்கு வேளாண் காடுகள் திட்டம் ரூ.17.70 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

› காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பயிர் இழப்புகளைத் தடுக்க காட்டுப்பன்றி சேதத் தடுப்புத் திட்டம் ரூ.7.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

› அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம் ரூ.56.72 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள், உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் 20 % கூடுதல் மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மின்மோட்டார், சூரிய சக்தி பம்புசெட்டுகள், 300 ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறுகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும்.

› மழை, வெயிலிலிருந்து விளைபொருட்களைப் பாதுகாக்க 43,500 தார்ப்பாய்கள் வாங்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

› எல் நினோ தாக்கத்தால் 12 மாவட்டங்களில் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

# உன்னைத் தேடுவேன்...

**கவிதை**

கரையைக் காண,
அதில் உன் கால்தடங்களைக் காண,
பல நாள் தூங்காமல் கரையைக்
கண்ட அலைபோல்,
கடலுக்குள் போகாமல் கரையில்
சிறிது நேரம் உன் கால்தடங்களைத்
தேடும் அலை போன
பின்னும் கரையில் நுரைபோல்
உன்னைத் தேடுவேன்
அலை போல் உனக்காக



**ராமகிருஷ்ணன்**
26/1 Raja street, Bharathiyar nagar,
Koyambedu market A road, Chennai 600107.
Phone: 86818 76155

# முன்னாள் விளையாட்டு வீரர்கள் 13 பேருக்கு ஓய்வூதிய ஆணை

## அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வழங்கினார்




**மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ்அர்ஜுனா அவர்கள் (30.07.2026) தலைமைச் செயலகத்தில், பொருளாதாரத்தில் நலிந்த நிலையிலுள்ள 13 முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய ஆணைகளையும், 3 நபர்களுக்கு குடும்ப ஓய்வூதிய ஆணைகளையும், ஓய்வூதிய நிலுவைத் தொகையினையும், வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் திரு. சந்தீப்நந்தூரி, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாதரெட்டி, இ.ஆ.ப., பொதுமேலாளர் திருமதி ல. சுஜாதா ஆகியோர் உடனிருந்தனர்.**

*தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம், பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தின்கீழ், விளையாட்டுத் துறைக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், ஓய்வுக்கு பிறகு அவர்களது வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் விதமாகவும், 58 வயதை எட்டிய நலிந்த நிலையில் உள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு மாதம் தோறும் ரூ.6 ஆயிரம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.*

*இதன் ஒரு பகுதியாக, பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ள 13 முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய ஆணைகளையும், 3 பேருக்கு குடும்ப ஓய்வூதிய ஆணைகளையும், அதற்கான நிலுவைத் தொகையாக ரூ.14.13 லட்சத்துக்கான காசோலைகளையும் சென்னை தலைமைச் செயலகத்தில் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நேற்று வழங்கினார்.*

*இத்திட்டத்தின்கீழ் 82 நலிந்த நிலையில் உள்ள முன்னாள் விளையாட்டு வீரர்கள், 13 குடும்ப ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெற்று பயனடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஓய்வூதிய ஆணைகளுடன் சேர்த்து, 4 பெண்கள், 2 ஆண்கள் என மொத்தம் 6 பயிற்றுநர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் அமைச்சர் வழங்கினார். இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறை செயலர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சுமன், பொது மேலாளர் ல.சுஜாதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

# வடமாநில தொழிலாளர்கள் நலன்காக்க உரிய நடவடிக்கை



**தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் திரு. ஜா. முகமது பர்வேஸ் அவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் பயிற்றுநர்களுக்கு கலந்தாய்வு முறையில் பதவி உயர்வு ஆணைகளை (30.07.2026) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் திரு.கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் டாக்டர். சி. பழனி, இ.ஆ.ப. மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

## அமைச்சர் பர்வேஸ் திட்டவட்டம்

*தமிழகத்தில் வடமாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று அமைச்சர் முகமது பர்வேஸ் தெரிவித்தார். அரசு ஐடிஐகளில் பணியாற்றும் 136 இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கு, உதவி பயிற்சி அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளன.*

*இவர்களுக்கு பதவி உயர்வு ஆணைகளை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று வழங்கினார். இந்நிகழ்வின்போது, தொழிலாளர் நலத்துறை செயலர் கொ.வீரராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் சி.பழனி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.*

*அதன்பின் அமைச்சர் பர்வேஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இத்துறையில் இதுவரை இல்லாத வகையில் 136 பயிற்றுநர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில் முதல் முறையாக கணினிவழி கலந்தாய்வு மூலமாக வெளிப்படைத்தன்மையுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது*

*தமிழகத்தில் எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், தொழிலாளர்களின் பாதுகாப்பில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அமோனியா கசிவு தொடர்பாக 21 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் விதிகளை மீறிய 28 ஆலைகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.*

*எந்தவொரு தொழிற்சாலையிலும் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்த அனுமதி இல்லை. இதை கண்காணிக்கத் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆய்வுகளில் சுமார் 70 குழந்தைத் தொழிலாளர்களும், 150 கொத்தடிமைகளும் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர்.*

*தமிழகத்தில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட வெளிமாநிலத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களின் விவரங்களைச் சேகரிக்க பிரத்யேக வலைதளம் உருவாக்கப்பட்டு, இதுவரை 13.4 லட்சம் தொழிலாளர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களை அணுகி மீதமுள்ளவர்களையும் பதிவுசெய்ய அறிவுறுத்தி வருகிறோம். வட மாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் மூலமாகத் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதையும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.*

## காவிரி நதிநீர் விவகாரத்தை

# அரசியல் ரீதியாக பார்க்கக் கூடாது

## அமைச்சர் ராஜேஷ்குமார் கருத்து



காவிரி விவகாரத்தை அரசியல்ரீதியாக பார்க்கக்கூடாது என சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் கூறியுள்ளார். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் நடத்தப்படும் படகு குழாம்கள், வண்டலூர் உயிரியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிறு உணவுகள், தின்பண்டங்கள் கிடைக்க செய்யும் வகையில் "குயிக் பைட்ஸ்" என்ற சிற்றுண்டி துரித உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக டீ, காபி, கேக் வகைகள், குளிர் பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம்கள் உள்ளிட்ட சிற்றுண்டிகள் விற்பனை செய்யும் வகையில் குயிக் பைட்ஸ் சிற்றுண்டி துரித உணவகத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் சுற்றுலா வளர்ச்சிக்கழக பொது மேலாளர் லட்சுமி பிரியா மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன் பின்னர் நிருபர்களிடம் அமைச்சர் ராஜேஷ்குமார் பேசியதாவது: புதிதாக திறக்கப்பட்டுள்ள சிற்றுண்டியில் குறைந்த விலையில் உணவுகளை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

கடந்த 2 வருடமாக சுற்றுலாத்துறை மூலமாக திருப்பதிக்கு ஆன்மீக பயணம் செல்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வரிடம் எடுத்துரைத்துள்ளோம்.

முதல்வரும் ஆந்திர அரசிடம் பேசி மீண்டும் ஆன்மீக சுற்றுலாப் பயணத்திட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார். காவிரி விவகாரத்தில் தமிழக காங்கிரஸ் தமிழக மக்களுக்கு ஆதரவாக இருக்கிறது.

அதன் காரணமாகத்தான் சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கும் ஆதரவை அளித்தோம். காவிரி விவகாரத்தை அரசியல் ரீதியாக பார்க்கக்கூடாது. அப்படிப்பார்த்தால் தமிழகம் பாலைவனமாக மாறிவிடும். மேகேதாட்டுவில் அணை கட்ட விடமாட்டோம். இவ்வாறு அவர் பேசினார்.

# மேகேதாட்டு அணை திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பியது மத்திய அரசு

## கர்நாடக அரசின் முயற்சிக்குப் பின்னடைவு



கர்நாடக அரசு சமர்ப்பித்த மேகேதாட்டு அணையின் விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையம் திருப்பி அனுப்பி உள்ளது.

கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே, மேகேதாட்டுவில் ரூ.9 ஆயிரம் கோடி செலவில் 67.14 டிஎம்சி கொள்ளளவுக் கொண்ட புதிய அணையைக் கட்ட முடிவெடுத்துள்ளது. இதை தமிழக அரசு எதிர்த்து வரும் நிலையில், கர்நாடக அரசு கடந்த 2018-ம் ஆண்டு முதல்கட்ட திட்ட வரைவு அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.

அதை பரிசீலித்த மத்திய நீர்வள ஆணையம், விரிவான திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது. அதன்படி கடந்த 2019-ம் ஆண்டு விரிவான திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்ட தகவல்கள் காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக இருந்ததால், அதை திருத்தி வழங்குமாறு மத்திய நீர்வள ஆணையம் மீண்டும் உத்தரவிட்டது.

இதையடுத்து, கர்நாடக அரசு கடந்த ஏப்ரல் மாதம் திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையத்திடம் சமர்ப்பித்தது. இந்நிலையில், “அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள தகவல்கள், அந்த அறிக்கை குறித்து மத்திய நீர்வள ஆணையத்தின் நிலைப்பாடு என்ன?” என்று பூவுலகின் நண்பர்கள் அமைப்பு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பி இருந்தது.

**முரணான தகவல்கள்:** அதற்கு மத்திய நீர்வள ஆணையம் அளித்துள்ள பதிலில் கூறியிருப்பதாவது: கர்நாடக அரசு சமர்ப்பித்துள்ள விரிவான திட்ட அறிக்கையில் முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 2018-ல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை மீறும் வகையில் இருந்ததால், அந்த திட்ட வரைவு அறிக்கை திருப்பி அனுப்பப்பட்டது. திட்ட அறிக்கையைத் திருத்தியோ அல்லது புதிய விரிவான திட்ட அறிக்கையையோ தாக்கல் செய்ய கர்நாடக அரசுக்கு கடந்த ஜூன் 29-ம் தேதி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட திட்ட அறிக்கையில், குடிநீர் தேவைக்காக அணை கட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு தாக்கல் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையில் சிவன சமுத்திரம் நீர்மின் திட்டத்தை மேகேதாட்டு அணை திட்டத்துடன் இணைக்கப் போவதாகத் தெரிவித்தது. அதற்காக 4.75 டிஎம்சி நீரில் இருந்து 6.90 டிஎம்சி நீரை பயன்படுத்தப் போவதாகக் கர்நாடக அரசு குறிப்பிட்டிருந்தது.

இந்த கூடுதலான நீர் பயன்பாடு உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது. அதேபோல, பெங்களூரு மாநகரின் தற்போதைய குடிநீர் தேவை 16.1 டிஎம்சி என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் பழைய புள்ளி விவரங்களில் இருந்து முரணாக இருக்கின்றன. எனவே கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை ஏற்கப்படவில்லை. இவ்வாறு மத்திய நீர்வள ஆணையம் தெரிவித்துள்ளது.

மேகேதாட்டு அணையின் விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையம் திருப்பி அனுப்பியது கர்நாடக அரசுக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. எனவே, கர்நாடக அரசு மீண்டும் திட்ட அறிக்கையை திருத்தி மத்திய அரசிடம் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழகத்துக்கு 3,500 கன அடி நீர் திறந்துவிட உத்தரவு

‘‘காவிரியில் தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 3,500 கன அடி நீரை கர்நாடக அரசு திறந்து விட காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 28-ம் தேதி காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில், தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு வினாடிக்கு 3,500 கன அடி நீரை திறக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடப்பட்டது. இதற்கு எதிராக கர்நாடகாவில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டதால் காவிரி மேலாண்மை ஆணையத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்தது.

டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ். கே.ஹல்தர் தலைமையில் நேற்று அவசர கூட்டம் நடைபெற்றது. இதில் கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர். அப்போது கர்நாடக அரசின் தரப்பில் தற்போதைய சூழலில் நீரை திறந்துவிட இயலாது என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு தமிழக அரசின் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

கடைசியில் காவிரி மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ். கே.ஹல்தர் கூறும்போது, “கர்நாடக அணைகளில் தற்போது 55 டிஎம்சி நீர் இருப்பில் உள்ளது. அடுத்த 2 மாதங்களில் மழை பொழிய வாய்ப்பு உள்ளது. எனவே, வறட்சி கால நீர் பங்கீட்டின்படி, தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 3,500 கன அடி நீரைத் திறந்துவிட வேண்டும்” என்று உத்தரவிட்டார். ●

# பசுமை தமிழகத்துக்கான 4 வார செயல்திட்டம்

## வீ த லீடர்ஸ் அமைப்பு வெளியிட்டது

ஆகஸ்ட் மாதத்தை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாதமாக வீ த லீடர்ஸ் அமைப்பு கடைப்பிடித்து வரும் நிலையில், பசுமை தமிழகத்துக்கான 4 வார செயல்திட்டங்களை இவ்வமைப்பு வெளியிட்டுள்ளது.

நாளைய பசுமையான தமிழகத்தை உருவாக்கும் நோக்கில், இந்த ஆகஸ்ட் மாதத்தைச் 'சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாதமாக' அண்ணாமலையின் வீ த லீடர்ஸ் அமைப்பு அறிவித்துள்ளது. வாரந்தோறும் ஒரு முக்கியக் கருப்பொருளின் கீழ் இந்தப் பிரச்சாரம் திட்டமிடப்பட்டுள்ளது.

எந்தவொரு மாற்றமும் தனி மனிதனிடமிருந்தே தொடங்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் முதல் வாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் வீட்டைத் தூய்மையாகப் பராமரித்தல், மக்கும் மற்றும் மக்காத குப்பைகளைப் பிரித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல், மரக்கன்




றுகளை நடுதல் மற்றும் நீர் சேமிப்பு போன்ற பணிகளில் குடும்ப உறுப்பினர்களை முழுமையாக ஈடுபடச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தங்கள் வசிப்பிடத்தைச் சுற்றியுள்ள தெருக்களைத் தூய்மையாக வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டு இரண்டாவது வாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தெருக்களில் தூய்மைப் பணி முகாம்களை நடத்துதல், உள்ளூர் மக்களை ஒன்றிணைத்துச் சுழற்சி முறையில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற செயல்பாடுகள் இதில் இடம் பெற்றுள்ளன. மூன்றாவது வாரத்தில், சமுதாய அளவில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் நோக்கில், கடற்கரைகள், சந்தைகள், பேருந்து நிலையங்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேலும் பள்ளி, கல்லூரி வளாகத் தூய்மைப் பணிகள், மிதிவண்டி பேரணி மற்றும் பசுமை நடைப் பயணம் போன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளும் இதில் ஒருங்கிணைக்கப்பட உள்ளன. இறுதி வாரத்தில், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நடைமுறைத் தீர்வுகள் குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன. அந்த வகையில், ஆகஸ்ட் மாதம் 4 வாரமும் பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, சுத்தமான மற்றும் பசுமையான சமுதாயத்தைப் படைக்க 'வீ தி லீடர்ஸ்' அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

# மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்கு ரூ.9.74 கோடி வாடகை நிலுவை வசூல்

சென்னை மயிலாப்பூர் லஸ்சர்ச் சாலையில் கபாலீசுவரர் கோயிலுக்கு சொந்தமான 14 கிரவுண்ட் 910 சதுரஅடி நிலம் 1901-ம் ஆண்டு அமிர்தான்ஜன் நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 2001 முதல் அரசு ஆணைப்படி நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இதை எதிர்த்து அமிர்தான்ஜன் நிறுவனம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையால், அமிர்தான்ஜன் நிறுவனத்தின் மேல் முறையீடு, மறு ஆய்வு மனுக்களை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், நிலுவைத் தொகையை செலுத்த உத்தரவிட்டது.



இதையடுத்து, 2018-ம் ஆண்டு வரையிலான நிலுவைத் தொகை ரூ.9 கோடியே 74 லட்சத்து 67,151-ஐ வசூலிக்கும் வகையில் ஜப்தி நடவடிக்கை எடுக்க கோயில் செயல் அலுவலர் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 18-ம் தேதி விப்பு வழங்கப்பட்டு, ஆகஸ்ட் 2-ம் தேதிக்குள் பணம் செலுத்த கெடு விதிக்கப்பட்டது. ஜப்தி நடவடிக்கைக்கான காலக்கெடு இன்று முடியும் நிலையில், அமிர்தான்ஜன் நிறுவனம் 10 சதவீதம் டிடிஎஸ் பிடித்தம் போக ரூ.8,77,20,436-க்கான வரைவோலையை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி.விஜயகுமார் ரெட்டியிடம் வழங்கியது.

### குமரி முதல் தூத்துக்குடி வரையிலான

# கடற்கரையை தூய்மையாக்கும் பணியை தொடங்கி வைத்தார் அண்ணாமலை

## பொது சேவைக்கு வர இளைஞர்களுக்கு அழைப்பு



**கன்னியாகுமரியில் ‘வீ த லீடர்ஸ்’ அமைப்பின் முதன்மை சேவகர் அண்ணாமலை கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணியை தொடங்கி வைத்தார்.**

எந்த எதிர்பார்ப்புகளும் இன்றி இளைஞர்கள் பொது சேவைக்கு வர வேண்டும் என வீ த லீடர்ஸ் இயக்க முதன்மைச் சேவகர் அண்ணாமலை வலியுறுத்தி உள்ளார்.

கன்னியாகுமரி முதல் தூத்துக்குடி வரை 175 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையை தூய்மைப் படுத்தும் பணியை வீ த லீடர்ஸ் இயக்கம் நேற்று தொடங்கியது. கன்னியாகுமரியில் அண்ணாமலை தொடங்கி வைத்து, கடற்கரையில் தூய்மைப் பணி மேற்கொண்டார்.

பின்னர் அவர் பேசியதாவது: தமிழகத்தின் மொத்த கடற்கரை நீளம் 1,075 கிலோ மீட்டர். இதில் 175 கிலோ மீட்டர் தூர கடற்கரையை சுத்தம் செய்ய முன்வந்துள்ளோம். குமரியில் தொடங்கி தூத்துக்குடி வரை இந்த பணி நடைபெறும். ஒரு ஆண்டில் 175 கிலோ மீட்டர் கடற்கரை பகுதி முழுவதும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கம்.

இந்தியாவில் ஒரு ஆண்டுக்கு நாம் போடக்கூடிய பிளாஸ்டிக் குப்பைகள் மட்டும் 26 ஆயிரம் டன். அதில் 16 ஆயிரம் டன் மட்டும்தான் நாம் எடுக்கிறோம்.

இதனால் நிலத்தடி நீர் எவ்வளவு ஆழமாக போயிருக்கும் என்று சிந்திக்க வேண்டும். நம்முடைய காலத்துக்கு பின்பும் இந்த கடற்கரை இருக்க வேண்டும். இயற்கை சுத்தமாக இருக்க வேண்டும். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இளைஞர்கள் இந்த பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

புகைப்படம் இல்லாத ஒரு இயக்கமாக நாம் மாற முயற்சி செய்ய வேண்டும். அது நம்முடைய முதல் குறிக்கோள். வேலையில் மட்டும்தான் கண்ணும் கருத்துமாக இருப்போம். ஒரு புகைப்படம், செல்பி எடுத்து, நான் வேலை செஞ்சேன் என்று பெருமை தேடுவதற்காக வீ த லீடர்ஸில் யாரும் இருக்கமாட்டார்கள். ஓர் ஆண்டு காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரும் பக்குவப்பட்டு, நாம் எல்லோருமே தலைவர்களாக மாறுவோம். நாமும் மாற வேண்டும், மற்றவர்களை மாற்ற வேண்டும். அதனால்தான் மாறுவோம் மாற்றுவோம் என்று சொல்கிறோம்.

இவ்வாறு அண்ணாமலை பேசினார். ●

# ஓம் சக்தி பராசக்தி!

ஆன்மிகம்

ஆடி மாசம் அம்மனின் திருவிழா. நம்ம தெருவெங்கும் கூழ் ஊற்றும் கோயில் திருவிழா. நம்ம ஊரு அம்மனுக்கு கூழ் ஊற்றி கொண்டாடுவோம். நம்மையெல்லாம் காத்து அருளும் நம்ம ஊரில், நம்ம ஊரு அம்மன் வீதி உலா வருவது போல் எல்லா ஊரிலும் எல்லா அம்மனும் ஆடி மாதம் வீதி உலா வருவாங்க. எல்லா அம்மனையும் வணங்கி வரவேற்போம். அம்மனின் அருள் பெற்று ஆடி மாதம் திருவிழாவை கொண்டாடி மகிழ்வோம்.

மாரியம்மா மனசு வச்சா மழை வரும் அப்பா. நம்ம மனசு செல்லாம் நிறைஞ்சபடி வாழ்வு வரும். அப்பா விவசாயம் செழித்து இருக்கும் அப்பா. கோலவிழி அம்மன் கோயிலுக்கு வந்து கும்பிட்டு பாரப்பா. உன் குறையெல்லாம் தீர்ந்து போகும். நீயே எண்ணிப் பாருப்பா. திருவேற்காடு கருமாரியம்மனை கண்டு வணங்கிப் பாரப்பா. அவள் கருணை எல்லாம் ரொம்ப பெருசுதான் அப்பா. மாங்காட்டு காமாட்சி அம்மனை மலர்களால் அர்ச்சனை செய்து வழிபடப்பா. வாழ்க்கையே அவள் அருளால் நலமாகும் அப்பா.

மதுரை மீனாட்சி அம்மன் அருளால் மங்கையர் மனம் மங்களம் பொங்கும் நாள்தான் அப்பா. பாளையத்து அம்மனின் பாசம்தானே. அவளைப் பார்த்ததும் நமக்கு நல்லதாகவே அருள்வாளே அவள்தான் அப்பா.

மயிலை முண்டக்கண்ணி அம்மனின் கண் ஒளி பார்வையில் கஷ்டம் விலகி நல்வாழ்வு பிறக்கும் அப்பா. திருவீதி அம்மன் உலா வரும் நாள் ஆடி மாதம்தான் அப்பா. திரெளபதி அம்மன் அருள் எல்லாம் நமக்கு திறமையாகும் அப்பா. பாஞ்சாலி அம்மன் ஆலயத்தில் பூமிதி விழா பாரப்பா. உனக்குப் புண்ணியம் வந்து சேரும் அப்பா. ஆதிபராசக்தி அம்மனை வணங்கி அப்பா.

அவள் அருள் உலகத்துக்கே உன்னதமானதுதான் அப்பா. அருள் புரியும் அன்னை அனைவரையும் வணங்கி அருள் பெற்று நாமெல்லாம் நலமாக



வாழ அன்னை ஆதிபராசக்தியை வணங்கி வாழ்வோம் அப்பா.

ஓம் சக்தி பராசக்தி!

ஓம் சக்தி பராசக்தி!

ஓம் சக்தி பராசக்தி!

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja street,
Bharathiyar nagar,
Koyambedu market A road,
Chennai 600107.
Phone: 86818 76155




தினம் தினம் நமக்கு இன்று சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அன்று அதை நமக்காக வாங்கித் தந்தவர்கள் நம் முன்னோர்கள். ஆங்கிலேயர்களிடம் அடியும் உதையும் பட்டாலும் அடிபணியாத நம் இனத்தின் வீரத்தையும் மன உறுதியையும் நினைத்து, நாட்டுக்காக எழுந்த நம் வீரர்களைப் போற்றி மகிழ்வோம். அவர்களின் தியாகங்களைப் பாராட்டி என்றும் பாடுவோம்.

அமைதியாக சுதந்திரத்தை அவர்கள் கொடுக்கவில்லை. “வெள்ளையனே வெளியேறு!” என்று அறைகூவல் எழுப்பி வீரத்துடன் போராடிய நம் முன்னோர்களும், அன்றைய இளைஞர்களும் பாடுபட்டு வாங்கிய சுதந்திரம்தான் இன்று பட்டொளி வீசி நம் நாட்டிலும், நம் வீடுகளிலும் ஒளிர்கிறது. நம் நாட்டின் பெருமையை இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எடுத்துக்கூறுகிறது.

“வந்தே மாதரம்! நமதே பாரதம்! வந்தே மாதரம்!” என்று அன்று உரக்க முழங்கிய மந்திரச் சொல்தான் இன்று உலகிற்கு நம் நாட்டின் அடையாளமாக விளங்குகிறது. நம் நாடுதான் நம் அனைவருக்கும் சொந்தமான வீடு. அதுதான் நம் இந்தியா.

அன்று ஆங்கிலேயர்கள் நம் முன்னோர்களையும் இளைஞர்களையும் அடித்து சிறையில் அடைத்தார்கள். அவர்கள் சிறையில் அடைக்க முடிந்தது நம் வீரர்களின் உடல்களை மட்டுமே. ஆனால் அவர்களின் மூச்சையும், சுதந்திர உணர்வையும், வீரப் பேச்சையும், நாட்டுப்பற்றையும் அடைக்க முடியவில்லை. அவர்களின் உணர்வுகள் நாட்டின் ஒவ்வொரு இளைஞரின் உள்ளத்திலும் தீப்பொறியாகப் பரவி, வெள்ளையர்களை எதிர்த்து போராடச் செய்தன. இதன் மூலம், மனதில் இருக்கும் சுதந்திர உணர்வை எந்த சக்தியாலும் சிறைப்படுத்த முடியாது என்பதை நம் முன்னோர்கள் உலகிற்கு நிரூபித்துக் காட்டினார்கள்.

“வெள்ளையனே வெளியேறு!” என்று முழங்கி, நமக்கான சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவர்கள் நம் முன்னோர்களும் அன்றைய இளைஞர்களும்தான். நம் நாட்டுக்காக அவர்கள் எண்ணற்ற துன்பங்களையும், வேதனைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். இருந்தாலும் விடாமுயற்சியுடன் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, “நம் நாடு நமக்கே” என்ற உறுதியுடன் போராடி, வெள்ளையர்களை விரட்டி, சுதந்திரத்தை வென்று மகிழ்ந்தார்கள்.

அந்த மகிழ்ச்சியை இன்று என்றும் நம் மனதில் நினைவுகூர்வோம். நாட்டுக்காகவும் நமக்காகவும் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்து சுதந்திரத்தை வாங்கித் தந்த தியாகிகளை வணங்குவோம்.

வாழ்க பாரதம்!

வந்தே மாதரம்!

வந்தே மாதரம்!

வந்தே மாதரம்!

என்று முழங்கி, நம் பாரத மாதாவுக்கு பெருமை சேர்ப்போம். நம் முன்னோர்களுக்கும், அன்றைய இளைஞர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் இந்த நல்ல நாளில் நன்றிகளைத் தெரிவித்து வணங்குவோம்.

பாரத மாதாவை வணங்குவோம். நாட்டைக் காக்கும் வீரர்களை வணங்குவோம். நாட்டுக்காகப் போராடி உயிர்த் தியாகம் செய்த தியாகிகளை வணங்குவோம்.

பாரத மாதாவுக்கு ஜே!

பாரத மாதாவுக்கு ஜே!

பாரத மாதாவுக்கு ஜே!

இந்த சுதந்திர தினத்தை அனைவரும் ஒற்றுமையுடனும் சுதந்திர உணர்வுடனும் கொண்டாடி மகிழ்வோம்.

ஜெய் ஹிந்த்!

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja street, Bharathiyar nagar,
Koyambedu market A road,
Chennai 600107.
Phone: 86818 76155

RNI No. TNTAM / 2021 / 85933

# முதல்-அமைச்சர் விஜய்யுடன் நடிகர் சிவகார்த்திகேயன் சந்திப்பு



சென்னை: முதல்-அமைச்சர் விஜய்யை சந்தித்து வாழ்த்து தெரிவித்தது ஒரு ஒரு பெருமைக்குரிய தருணம் என சிவகார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்-அமைச்சர் விஜய்யை நடிகர் சிவகார்த்திகேயன் நேரில் சந்தித்து பேசினார். மரியாதை நிமித்தமாக இந்த சந்திப்பு நடைபெற்றதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது. தமிழக முதல்-அமைச்சராக விஜய் பதவியேற்ற பிறகு முதல் முறையாக அவரை சிவகார்த்திகேயன் நேரில் சந்தித்து பேசியுள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

"மக்களின் மனங்களை மகிழ்விப்பதில் தொடங்கி மாநிலத்தையே வழிநடத்துவது வரை, சில பயணங்கள் உண்மை யிலேயே அசாதாரணமானவை. தமிழகத்தின் மாண்புமிகு முதல்-அமைச்சர் விஜய் அவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்தது ஒரு பெருமைக்குரிய தருணம்.

'ரசிகன் எக்ஸ்பிரஸ்' முதல் 'விஜய் அவார்ட்ஸ்' மேடை வரை, 'GOAT' திரைப்படத்தில் இணைந்து நடித்தது முதல், இப்போது உங்களுடன் இந்தத் தருணம் வரை; இது எப்போதும் மிகவும் சிறப்பானதாகவே இருக்கும். அந்த சகோதரத்துவமும், அந்த பிணைப்பும், எப்போதும் தொடர்கிறது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002

# நடிகர் சிவகார்த்திகேயன் நற்பணி இயக்கத்தின் சார்பாக வீடுகள் தீப்பிடித்து எரிந்தவர்களுக்கு நிதியுதவி வழங்கினார்கள்







சிவகார்த்திகேயன் நற்பணி இயக்கத்தின் சார்பாக ஆகஸ்ட் - 8ஆம் தேதியன்று நாள்தோறும் நற்பணி செய்வோம் திட்டத்தை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம் திருமுல்லைவாசல் கிராமத்தில் திடீரென தொடர்ச்சியாக 3 வீடுகள் தீப்பிடித்து எறிந்ததை அறிந்து ஆகஸ்ட்-8 தேதியன்று சிவகார்த்திகேயன் நற்பணி இயக்கத்தின் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் Dr.தினேஷ்குமார்,MBBS,F. DIAB., அவர்கள் நேரில் சென்று ஒரு வீட்டிற்கு ரூ.2500 வீதம் 3 வீடுகளுக்கும் ரூ.7500 நிதியுதவி மற்றும் ரூ.4000 மதிப்பிலான வேஷ்டி சேலைகளும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி தலைவர் C.ஹரிஹரன்,BE,M.Ped,NIS (Hockey),மாவட்ட மருத்துவரணி செயலாளர் Dr.ச.முத்துகுமரன்,MBBS,MD., கொள்ளிடம் ஒன்றிய தலைவர் G.பாலமுருகன்,B.VOC., கொள்ளிடம் ஒன்றிய இளைஞரணி தலைவர் S.பிரகாஷ்., சீர்காழி ஒன்றிய பொருளாளர் S.அபிமன்யூ,BE., சீர்காழி நகர இளைஞரணி தலைவர் தீனதயாளன், சீர்காழி நகர சமூக வலைதளப் பிரிவு செயலாளர் ஹரிஹரன்,BE., குத்தாலம் ஒன்றிய தலைவர் சி.பிரபாகர்,DM., குத்தாலம் ஒன்றிய செயலாளர் நவீன் குமார், மற்றும் பல நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323